www.tamilarangam.net

# எரிமலை

கலை பண்பாட்டு சமூக அரசியல் ஏடு - சித்திரை 1992



P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE - FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காற்றில்
மழையில்
கடும் புயலில்
மூசிப் பெய்யும் மூர்க்கப் பனிமழையில்
தேகம் நடுங்க
தெருவிவில் கிடப்பவர் எம்மவர்

ஈரம் உலராத இதயம் கொண்டவரே
ஒரு கை தாருங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# உள்ளே மலர்பவை



## இறைமை

தமிழீழ தேசிய இனம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தனது பிரதேசங்களில் ஆதிபத்திய இறைமையுடன் திகழ்ந்தது. ஆசியாவின் குறிப்பாக இந்திய உபகண்டத்தின் பொதுப்பண்பிற்கேற்ப சிற்றரசுகளூடாக இவ் இறைமை செயற்பட்டது.

........ 05.

## உதயம்

யூகோசிலாவியா என்ற ஒரு நாட்டிலிருந்து பல நாடுகள் பரிணமித்துவிட்டன. ஆறு சமஸ்டிக் குடியரசுகளைக் கொண்டிருந்த அந்நாட்டில், நான்கு குடியரசுகள் தனித்தனி நாடுகளாக தம்மைப் பிரகடனப்படுத்திவிட்டன.

........ 20.





## தேவைகருதி


விடுதலைப் புலிகள் அமைப்பை "சர்வதேச பயங்கரவாத அமைப்பாக" வலிந்து காட்டுவதன்மூலம், சர்வதேச மத்தியஸ்தத்தை முறியடித்துவிடலாம் என்ற நப்பாசையுடன் இந்தியா செயற்படுகின்றது. இவ்வரசியல் நடவடிக்கையை, நீதித்துறை நடவடிக்கை என்ற போர்வையிலும், தமிழக அரசின் மூலமும் செய்வதிலேயே இந்தியாவின் ராஜதந்திரம் சிறப்பாகச் செயல்புரிகின்றது.

........ 26.

## வல்லரசுக் கனவு

இந்தியாவைப் பொறுத்தவரையில், இந்தியா தனது பிராந்திய வல்லரசுக்கனவை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. முன்னர் எழுபது வீதமான ஆயுதங்களை சோவியத் யூனியனிடம் இருந்து உதவியாகவும், மலிவாகவும் பெற்றுவந்தது. அந்நிலை இப்போது இல்லை. எனவே இராணுவத் தளபாடங்களுக்கும், உதவிகளுக்கும், தொழில் நுட்பத்திற்கும் அமெரிக்காவைத் தங்கிநிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

........ 31.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதினோராம் ஆண்டு

சித்திரை 1992



ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C. C. T - France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


## சூழும் போர் மேகங்கள்

சிங்கள இனவாத அரசாங்கத்தினால், சமாதானத் தீர்வொன்றைக் காணமுடியாது என்பது மேலும் மேலும் நிதர்சனமாகி வருகின்றது. அரசாங்கத்தின் இனவாதப் போக்கு, சிங்கள தேசத்திலுள்ள அதிதீவிர பாசிஸ சக்திகளினால் பாதிப்படைந்து கூர்மையடைவதையே காணக்கூடியதாக உள்ளது. சிங்கள பௌத்த குருமார், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினுள் கெல உறுமய அமைப்பு, ஐ. தே. கட்சியின் முன்னாள் பிரமுகர்கள், மேலும் பல உதிரிக் கோஷ்டிகள் ஆகியவை இனவாதப் பூதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளதோடு, அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு முயற்சிக்கு தூபமிட்டு வருகின்றன. இராணுவத் தீர்வை வேகப்படுத்தி, நியாயப்படுத்த அரசாங்கமே மறைமுகமாக இதைத் தூண்டிவிடுகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது. தொண்டமானின் சமரஸத் திட்டத்தை நிராகரிக்காது, அத்திட்டம் குறித்து மேலும் விளக்கம் கோருவதற்காக, விடுதலைப் புலிகள் தொண்டமானை யாழ் வருமாறு விடுத்த அழைப்பை அரசாங்கம் நிராகரித்தது. ”கருத்தொற்றுமையின் அடிப்படையில் சமாதானத் தீர்வு காணப் போவதாக” கூறி, எதிர்கட்சியினரான மங்கள சமரவீராவைத் தலைவராக வைத்து ஸ்ரீலங்காவின் அரசியல் சட்ட வரையறைக்குள் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் விடுத்த கோரிக்கையும் புறக்கணிக்கப்படும் நிலை, காணப்படுகிறது. ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திற்கு சிங்களக் கட்சிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட இத்தெரிவுக்குழு, தீர்வுக்கான பரிந்துரைகளை வழங்கும் அதிகாரம் (MANDATE) கொண்டதாக உள்ளது. தன்னைப் பிரச்சனையின் தீர்விலிருந்து விடுவித்துக்கொண்டு, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம், தீர்வுத் திட்டங்களை மேலும் பலவீனப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்பதும் விடுதலைப் புலிகள் உய்ந்துணர்ந்த விடயமே. ஆயினும் அரசாங்கத்தின் ஓர் அமைப்பு (MECHANISM) என்ற முறையில், அதன் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து, தெரிவுக் குழு தீர்மானித்திருக்கக்கூடிய தீர்வுக்கான திட்டத்தை அறிந்து கொள்ளவும், தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளையும், அரச அடக்குமுறையினால் தமிழ் மக்களுக்கு ஏற்படுகின்ற அவல நிலைகளையும் எடுத்துக் கூறுவதற்காகவே விடுதலைப் புலிகளினால் அழைப்பு சர்வதேச சங்கத்தின் மூலம் விடுக்கப்பட்டிருக்க வேண்டும். சமாதான முயற்சியை முன்தள்ளிச் செல்வதற்காக விடுதலைப் புலிகளினால் எடுக்கப்பட்ட இம் முயற்சிகள், அரசாங்கத்தின் பிடிவாத போக்கினால் தோல்வி அடைந்துவிடும் எனத் தெரிகின்றது. தெரிவுக் குழுவின் முன் விடுதலைப் புலிகள் தோன்றி சாட்சியமளிக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதினால், தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளையும், அதற்கான போராட்டத்தையும் சரணடையவே கோருகின்றது என்பது அர்த்தம். அப்படியானால் இத் தெரிவுக் குழுவும் ஒரு கண் துடைப்பே என்பதாகிவிடும்.

எனவே உண்மையில் அரசாங்கம் நடைமுறைப்படுத்த முனைவது தமிழ் மக்கள் மீதான இராணுவ மேலாதிக்கத்தையே. தமிழீழத்தின் விடுதலை செய்யப்பட்ட பகுதிகளை, இராணுவ அழிவு நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்துவதே அதன் உள்ளார்ந்த நோக்கமாக உள்ளது. சர்வதேச சமூகமும் போரை நிறுத்தி, சமாதானத் தீர்வைக் காணுமாறு, ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வலியுறுத்துவதோடு, அதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டு வரும் வேளையில், ஸ்ரீலங்கா அரசாங்கம், முரட்டுப் பிடிவாதமாக அழிவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து, நீண்டகாலப் போருக்கும், பயங்கர அழிவுகளுக்கும் வழிவகுக்கும் செயல்பாட்டில் இறங்கியுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாடு அரசாங்கத்தினதும், இந்திய அரசினதும் விடுதலைப் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகள் ஸ்ரீலங்கா அரசுக்கு பெரும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளன. மேலும் இந்திய இராணுவ அதிரடிப் படையினரை மீண்டும் தமிழீழத்தில் இறக்கி விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை அழிக்க நினைப்பது போன்ற இம்முயற்சிகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் மூடத்தனமாக தனக்குச் சாதகமான அம்சங்களாகக் கருதுகின்றது. இது பொதுவாக தமிழீழத்திற்கும், ஸ்ரீலங்காவிற்கும், தீவின் சகல மக்களுக்கும் பாதகமான விடயங்கள் என்பதை உணர்ந்து கொள்ளும் நிலையை இனவாதமும், குறுகிய அரசியல் லாபங்களும் மறைத்துவிடுகின்றன. இது யானை தன் தலையில் மண்ணை வாரி விடுவதற்குச் சமமானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# எல்லோரும் என்ர பிள்ளைகள்தான்!

## உண்மை நிகழ்வு

தகவல் : யதார்த்தன்

இந்திய இராணுவம் தமிழீழத்தில் கால் வைத்ததன்பின் ஏராளமான தமிழ் இளைஞர்கள் சிறைகளில் வதைக்கப்பட்டனர். காங்கேசன்துறை தடுப்பு முகாமில் உயிர் வதைக்கப்படும் இளைஞர்களைப் பார்த்துப் பேசவேண்டும் என்ற துடிப்போடு அந்தத் தாய் ஆயத்தமாகிக்கொண்டிருந்தாள். அவ்வாரத்து தினசரிப் பத்திரிகைகளில் உணவை பார்சல்க ளாகக் கட்டினாள். நாட்டு நடப்புக்களையும், சிறைக்கூடத்துக்கு வெளியே நடந்துகொண்டிருக் கும் உக்கிரமான போர் பற்றியும் அறிந்துகொள்ள எவ்வளவு ஆவலாக இருப்பார்கள் என்பதை உணர்ந்துதான் அவள் அவ்வாறு செய்தாள்.

போரில் இந்திய இராணுவம் தோல்வியை சந் திப்பதை, சிறையில் அவர்கள் யாரும் சொல் லாமலே அறிந்துகொள்வார்கள். இந்திய இரா ணுவத்திற்கு களத்தில் தோல்வி என்றால், அன்று சிறையில், அவர்களுக்கு விழும் அடி உதை சித்திரவதைகளில் இருந்து எவ்வகை யான இழப்பை அவர்கள் பெற்றிருப்பார்கள் என் பதை தரம் பிரிக்கும் அனுபவத்தைப் பெற்றிருந் தார்கள். மற்றும்படி, மற்றைய செய்திகளை அறிய அவர்களுக்கு வாய்ப்பேதும் இல்லை.

வழியில் பல சோதனைகளைத் தாண்டி அந்தத்தாய் மிகவும் சிக் கலான பயணத்தை மேற்கொண்டு காங்கேசன்துறை தடை முகாமை நோக்கி சென்றுகொண்டிருந்தாள்.

சோதனைத் தடை முகாம்களில் தலையாட்டி நின்று கொண்டிருந் தான். தனக்கு தெரிந்த புலிவீரர் களையும், புலி ஆதரவாளர்க ளையும் இனங்காட்ட தலையாட் டுவதே அவனது கடமையாக இருந்தது. அவனது ஈனச் செயல் கண்டு, சகிக்கமுடியாமல் அந்தத் தாய் கொதிப் படைந்தாள்.

"இவங்களெல்லாம்..... சீ... ஒரு மனிச ரெண்டு.....
இவங்கள்தான் சனங்களுக்காக போராட வெளிக் கிட்டவையாம்... தூ ! "

காங்கேசன்துறை இராணுவ முகாமை தெருவீதி யில் நின்று பார்த்தாள்.
முள்ளுக்கம்பி வேலிகள்,
காவற் கோபுரங்கள்,
சிறைக்கூடக் கதவுகளை உடைத்து எழுந்துவ ரும் அவலஒலங்கள்;
மனித நிழலுக்கும் சுட்டுவிடத் தயாராய் நீட்டிய படி துப்பாக்கிகள்.
ஐயோ! அம்மா.... ஐயோ ! அம்மா......
தாயைத் தேடி அழும் குழந்தையின் விம்மல்;
தாயுள்ளம் கனத்தது.
"எங்க இருந்து வந்தெல்லாம் எங்களை உதைக் கவெண்டே... உதைபட், சிறைபட என்றாச்சு எங்கட வாழ்வு"
சிறையதிகாரியை சினத்தோடு எதிர்கொண்டு,
கோர்ணலைப் பார்க்கவேணும்"
"உள்ள இருக்கிறார்"
அரசதோரணையில் ஆக்கிரமிப்பாளப் பிரதிநிதி.

www.tamilarangam.net



"என்ன வேணும்"
"என்ர பிள்ளையளைப் பார்க்கவேணும்"
"யார் உன் பிள்ளை?"
"எல்லாரும் என்ர பிள்ளையள்தான்; எல்லாரையும் பார்க்கவேணும்." உணர்ச்சிமேலிட ஏதேதோ முணுமுணுத்தாள்.
"அப்படி முடியாது; யாராவது ஒருவரைத்தான் பார்க்க அனுமதிக்கலாம்."
"இல்லை; முடியாது! எல்லாரும் என்ர பிள்ளையள்தானே எப்படி ஒருவனை மட்டும் பார்த்துவிட்டுப் போறது" அவள் கொஞ்சம் உரத்தே கூறினாள்.
முடிவில் அவள் எண்ணம் ஈடேறவில்லை
"இந்தா ஒருத்தரையும் காட்டவேண்டாம்; இந்தச் சாப்பாட்டை எண்டாலும் எல்லாரிட்டையும் கொடு. இல்லையெண்டால் என்னவாவது செய்து தொலை"
தன் பிள்ளைகளைப் பார்க்கமுடியாதுபோனதும் கிடைத்த பெரும் ஏமாற்றமும், சோகமும் வழி நெடுகத் தொடர நடந்தாள்.

"எல்லாரும் என்ர பிள்ளைகள்தான்"
கேர்ணலின் அறைக்குள் சில கணங்கள் அந்த வார்த்தை எதிரொலித்துக்கொண்டிருந்தது.

சில மாதங்கள் கடந்து, இந்திய இராணுவம் தமிழீழத்தைவிட்டு வெளியேறியபோது, அந்த கோர்ணலும் புறப்பட்டான். வானத்தில் வண்ணப் பட்சிகள் சிறகடித்துப்பறந்தன. அவற்றை இன்றுதான் காண்பதுபோல அவன் ரசிப்போடு உற்றுநோக்கினான்.
கப்பலில் ஏறி, வெறும் மரக்கட்டை ஒன்றை எறிவதுபோன்ற உணர்வுடன், சினத்தோடு தன் துப்பாக்கியை தன்முன்னால் இருந்த மேசைமேலே போட்டான்.
கப்பலில் நின்றுகொண்டு, தனது கண்ணெதிரே விரிந்த கிடக்கும் தமிழீழ வெளியை வியப்புடன் பார்த்தான். கப்பலின் சாளரங்களினூடு, தமிழீழக் காற்றுவந்து அவன் காதுகளில் ஒலித்தது;
"எல்லாரும் என்ர பிள்ளைகள்தான்"
தமிழீழத்தில் வீரப்போராளிகளை, அந்தத் தாய், அவளைப் போன்ற தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளாய் போற்றுகின்றதை அவன் திரும்பிப் போகின்ற வேளையில்தான் உணர்ந்தான்போலும். பலர்கூடி கலகலவென சத்தமிட்டுச் சிரிப்பதுபோல, காற்றுடன் சேர்ந்து கரும்பனைகள் கைகொட்டிநின்றன.
வெட்கம் மேலோங்க, தனது கைக்குட்டையால் முகத்தை துடைக்கும் பாவனையில் சில கணம் மூடிக்கொண்டான்.
திடீரென முகத்தைத் திருப்பி, சரியான திசைவழியே கப்பல் செல்கின்றதா என்ற கேள்வி தொனிக்கும் பார்வையை மாலுமியை நோக்கி வீசினான். ■

## கறிவேப்பிலை

*கறிவேப்பிலை கறியின் சுவைக்குப் பாவிக்கப்பட்டபின் கழித்து விடப்படுகிறது. அதேபோல் அரசு எம்மைக் கணிக்கக்கூடாது. எந்நேரமும் எம்மை அரசு தம்முடன் வைத்துக்கொள்ள வேண்டும். நாடு தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும் வேளையில் அரசுடன் இணைந்து செல்வதே எமக்கு நன்மைதருமென நான் கருதிச் செயற்படுகின்றேன்.*

*திவ்வியநாதன்*
*T. E. L. O பாராளுமன்ற உறுப்பினர்.*
*(தினகரன் 22. 03. 1992)*

ஈசாப்புக் கதை

## பறவைகளும் மிருகங்களும் வௌவாலும்

ஒரு காலத்தில் மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் யுத்தம் ஏற்பட்டது. யுத்தம் கடுமையாகப் பலநாட்கள் நடந்துகொண்டிருந்தது. காலையில் பறவைகள் ஜெயிக்கும் என்று தோன்றியது. வௌவால் பறவைகளின் கட்சியில் சேர்ந்து சண்டைபோட்டது. மிருகங்களின் கட்சி ஜெயிக்கும்போல அன்று பிற்பகல் தோன்றியது. உடனே வௌவால் மிருகங்களின் கட்சியில் சேர்ந்தது. ஆனால், மாலையில் கழுகின் சாமர்த்தியத்தால் வெற்றி பறவைகளின் பக்கம் திரும்பியது. இதைக் கண்ட வௌவால், பறவைகளிடம் தான் அகப்பட்டால் அவமானம் அடைந்து சாக நேரிடும் என்று பயந்து குகையில் போய்ப் பதுங்கியது. அன்று முதல் வௌவால் பகலில் வெளிவருவதில்லை; இருண்ட இடங்களிலேயே இருக்கும்; இரவு பறவைகள் தூங்கப்போன பின்புதான் வெளியே வரும். மிருகங்களும் வௌவாலைச் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டன.

**துரோகிகளை யாரும் சேர்க்க மாட்டார்கள்**

www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் போராட்டம்

## படிமுறை ஆய்வு

- பற்றிமாகரன் -

தமிழீழம் ஒரு நாடா அல்லது நாட்டுக்குள் ஒரு பாகமா? நாடு என்பதற்கு 1) மக்கள் தொகுதி 2) நாட்டெல்லை 3) இறைமை 4) அரசாங்கம் என்கிற நான்கு பண்புகள் அமைதல் வேண்டும் என்பர்.

இவ்வகையில் பார்ப்பின் தமிழீழம் என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து தமிழர் என்கிற மக்கட் தொகுதியைக் கொண்டுள்ளது. மானிடவியல் ஆய்வுகளும், வரலாற்று ஆழ்வாராய்ச்சிகளும் மற்றும் சமூகவியல் சான்றுகளும் நாகர்-இயக்கர் என்ற பழங்குடி மக்கள் இனத்தை அடியொற்றிய திராவிடக் குடும்பத்துள் அடங்கும் இலங்கைத் தமிழர்கள் யாழ்ப்பாணம் -மட்டக்களப்பு -திருகோணமலை -வவுனியா -மன்னார் -முல்லைத்தீவு என்று இன்றழைக்கப்படும் ஆறு முக்கிய நகர்களையும் சுற்றிவர அமைந்த பிரதேசத்துள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் வாழ்கின்றனர் என்பதைத் தெட்டத் தெளிவாக இனங்காட்டுகின்றன.

எனவேதான் நீண்டகால இருக்கை நிலை-தனியான மொழி-தனித்துவமான கலாச்சாரம்-தொடர்ச்சியான ஆட்சியுரிமை -சேர்ந்து வாழும் உளவியல் தன்மை என்பவற்றைக் கொண்ட இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என மிகத் தெளிவாக வரையறை செய்ய முடிகிறது.

இன்றைய இலங்கையில் இரு வேறு மக்கட் தொகுதிகளும் தமிழரிடையே உள்ளனர். இவர்கள் 1. இந்திய வம்சாவழித் தமிழர்கள் 2. முஸ்லீம்கள்.

இதில் இந்திய வம்சாவழித் தமிழர் எனப்படுவோர் பிரிட்டிஸ் அரசு இலங்கையை ஆட்சி செய்யத் தொடங்கிய காலத்தில் 1615 முதல் 1833க்கு இடைப்பட்ட கால கட்டத்தில் பிரிட்டிஸாரால் இலங்கையின் சிங்களப் பகுதிகளில் அறிமுகம் செய்யப்பட்ட பெருந்தோட்டத்துறை (தேயிலை, கோப்பி, இரப்பர்) யை நிர்மாணித்து வளப்படுத்தவேன தமிழ்நாட்டில் (இந்தியாவில்) இருந்து தொழில் சார் குடியேற்ற வாசிகளாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்களாவர். இவர்கள் சுமார் 175 ஆண்டுகளாக இலங்கையின் மலையகப் பகுதிகளில் வாழ்கின்றனர். சர்வதேச சட்ட அடிப்படையில் இவர்கள் குடியேற்ற வாசிகள். ஆயினும் சிங்களப் பேரினவாத எழுச்சி காரணமாக சர்வதேச நியதிகளுக்குரிய குடியேற்ற உரிமைகள் மறுக்கப்பட்டு நாடற்றவர்களாகவும் நலிவுற்றவர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்தப் பெருந்தோட்டத் தமிழர்கள், இனக்கூறாக அங்கீகரிக்கப் படுகிறார்களேயொழிய இவர்கள் தேசிய இனத்திற்குரிய அடிப்படைகளைப் பூர்த்தி செய்யவில்லை.

அடுத்து, முஸ்லீம்கள் இலங்கைக்கு வியாபார நோக்கமாக-பெருமளவில் பாகிஸ்தானில் இருந்தும், சிறிதளவு தமிழ் நாட்டிலிருந்தும் (இந்தியாவிலிருந்து) இடம் பெயர்ந்த வணிகர்கள். காலகதியில் சிங்கள-தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றவாசிகளாக மாறியுள்ளனர். இவர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே இனக்கசப்பு நிலை (1915 ம் ஆண்டு முஸ்லீம்-சிங்கள இனக்கலவரம்) நீடித்தாலும், தமிழ் அரசர்களுக்குக் குதிரை வியாபாரிகளாகவே பெரும்பாலான முஸ்லீம் வணிகர்கள் வந்ததினாலும், தமிழ் நாட்டில் நவாப் மன்னர்களின் ஆட்சி தோன்றி இஸ்லாமிய மதம் தமிழ் நாட்டில் வேரூன்றியதாலும் இம் முஸ்லீம்கள் தமிழையே தமது தாய்மொழியாகத் தத்தெடுத்துக் கொண்டனர். இதனால் சிங்களப் பேரினவாத அரசு தமிழ்த் தேசிய இனத்துள் இவர்களையும் ஒரு அங்கமாக அடக்கி தனது நிர்வாகத்தை நடாத்தி வந்துள்ளது. இம் முஸ்லீம்கள் குடியேற்றவாசிகளாகக் காணப்படுகின்றனர். ஆகவே இவர்கள் ஒரு தேசிய இனம் அல்ல என்பது மிகத் தெளிவாகின்றது.

இங்கு இந்திய வம்சாவழித்த

www.tamilarangam.net



மிழர்கள், முஸ்லீம்கள் பற்றி விரிவாக ஆராயவேண்டிய கட்டாயம் ஒன்று உண்டு. இன்று தமிழ்த்தேசிய இனத்தவரின் சுயநிர்ணய உரிமைபற்றி, ஆட்சி வடிவங்கள் பற்றிப் பேசும் பொழுது சிலர் முஸ்லீம்களுக்கும் அத்தகைய முறையில் தீர்வு கொடுக்கப்படல் வேண்டும். பெருந்தோட்டத் தமிழரின் நிலை என்ன? என்பன போன்ற விதண்டாவாதக் கேள்விகளை முன்வைத்து தேசிய இனவிடுதலைக்கான தீர்வுகளை குழப்ப முயற்சிக்கின்றனர். எனவேதான் இலங்கைத் தமிழர் என்னும் மக்கட் தொகுதியே "தேசிய இனம்" என்பதை ஆணித்தரமாக நிறுவுதல் எமது கடமையாகிறது.



ஆனால், தமிழீழம் என்கிற அரசுக்கு தனது சொந்த நாட்டெல்லையுள் வாழும் முஸ்லீம் இனக்கூறுக்கு (தமிழ் பேசுவதால் அவர்கள் தமிழ்க் கலாச்சாரத்தோடு நீண்ட தொடர்பு அற்ற நிலையிலும் கூட தமிழர்கள் இனக்கூறாக ஏற்கின்றனர்) நீதியும் அமைதியுமான ஆட்சி வழங்கும் கடமையுண்டு என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

அவ்வாறே மொழியால், கலாச்சாரத்தால் உடன் பிறப்புக்களாக நிற்கும் மலையகத் தமிழ் மக்களை தமிழீழ அரசு மனிதாபிமான முறையிலும் சகோதரத்துவ உறவிலும் அணுகும் என்பதையும், தமிழீழப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது மலையகத் தமிழ்ச் சகோதரர்களை பெருந்தன்மையுடன் தனது தேசிய இனமாகவே ஏற்றுக் கொள்ளும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டிய நிலையும் எமக்குண்டு.

எனவே இலங்கைத் தமிழர்கள் தான் "தேசிய இனம்" என்பது பெருந்தோட்டத் தமிழர்களுக்கோ அல்லது முஸ்லீம்களுக்கோ எதிரான வகுப்புவாதக் கோசமல்ல; நமது விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை நிறுவுவதற்கான செயற்பாடேயாகும்.

ஆகவே தமிழீழம் தனக்கென "இலங்கைத் தமிழர்" என்னும் மக்கட் தொகுதியை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தேசிய இனமாகக் கொண்டிருக்கிறது என்பது எள்ளவும் சந்தேகமின்றி நிரூபிக்கப்படுகிறது.

## நாட்டெல்லை

தமிழீழம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. (இந்திய-ஆசிய வரலாற்றின் பொதுப்பண்புக்கு தமிழீழப் பிரதேசமும் கட்டுப்படுகிறது) தமிழ் இலக்கியச் சான்றுகளின் படி இராவணன் இப்பிரதேசத்து மன்னர்களில் ஒருவனாவான் என்பது பலரின் முடிவு. அவ்வாறே சங்கத்துப் பாடல்களில் "ஈழத்திலிருந்து இறக்குமதிகள்" நடைபெற்றதற்கான சான்றுகள் வெளிப்படுகிறன. அத்துடன் ஈழத்துப் பூதன்

**இலங்கைத் தமிழர்கள்தான் "தேசிய இனம்" என்பது பெருந்தோட்டத் தமிழர்களுக்கோ அல்லது முஸ்லீம்களுக்கோ எதிரான வகுப்புவாதக் கோசமல்ல; நமது விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை நிறுவுவதற்கான செயற்பாடேயாகும்.**

தேவனார் என்னும் புலவர் சங்கப் புலவர் வரிசையில் மிகமுக்கியமானவராகக் காணப்படுகிறார். ஈழத்திலிருந்து குடிப்பரம்பல் நடைபெற்றதற்குச் சான்றாக கேரள மாநிலத்தில் "ஈழம் பூச்சிகள்" என்னும் சமூகத் தொகுதி விளங்குகின்றது.

இனி வரலாற்று நிலையில் பார்ப்பின் யாழ்ப்பாணத்து அரசு, வன்னிக்கோறளைப்பற்று அரசு, திருகோணமலை-மட்டக்களப்பு உள்ளடக்கிய பற்றுக்கள் என்பன காணப்படுகின்றன.

இலங்கையை போத்துக்கேயர் முதலிலும் டச்சுக்காரர் பின்பும் கைப்பற்றி ஆட்சி செய்த போதும் இவர்கள் உள்நாட்டு நிர்வாகத்தில் அக்கறை காட்டவில்லை. உள்நாட்டு நிர்வா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

கத்தை இவர்களுக்கு ஆதரவான உள்ளூர் முக்கியஸ்தர்களிடமே விட்டு விட்டு தாம் வந்த நோக்கமாகிய வாசனைப் பொருட்கள், விலைஉயர்ந்த கற்கள், முத்துக்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தனர். ஆயினும் போத்துக்கேயர் மூலம் கத்தோலிக்க கிறிஸ்துவ மதமும், டச்சுக்காரர் மூலம் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதமும் தமிழீழப் பிரதேசங்களில் பரவியது. இதனால் இம்மதக் குருக்களின் குறிப்புக்கள், கடிதங்கள் என்பன தமிழீழத்தின் எல்லை-நிர்வாகம்-நீதிபரிபாலனத் தன்மை போன்றவை பற்றி ஆதாரபூர்வமான குறிப்புக்களைத் தருகிறது. அத்துடன் 1515 ஐ அடுத்து இடம்பெற்ற புனித பிரான்ஸிஸ் சவேரியாரின் ஆசியாவுக்கென பயணங்கள் பற்றிய குறிப்புகளில் "மலபார் இனத்தவர்" என்ற தலைப்பில் தமிழர்களைப் பற்றிய குறிப்புக்களைக் காணலாம்.

பிரிட்டிஸாரின் காலத்துக் கடிதங்கள், ஆவணங்கள் என்பன தமிழீழத்து எல்லைபற்றி விரிவாகப் பேசுகின்றன.

சுருக்கம் கருதி நாட்டெல்லை பற்றிய வரலாற்று ஆய்வுகளை விளக்காமல் பொதுவாக இன்றைய இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் பிரிட்டிஸார் இலங்கையைக் கைப்பற்றும் பொழுது தமிழீழத்தின் நாட்டெல்லையாகத் திகழ்ந்தது என்பதை முடிந்த முடிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

எனவே தமிழீழ அரசின் நாட்டெல்லை மிகவும் தெளிவான சான்றுகளுடன் விளங்குகின்றது.




தமிழீழம்

**தமிழீழம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. தமிழ் இலக்கியச் சான்றுகளின் படி இராவணன் இப்பிரதேசத்து மன்னர்களில் ஒருவனாவான்.**

## இறைமை

தமிழீழத் தேசிய இனம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தனது பிரதேசங்களில் ஆதிபத்திய இறைமையுடன் திகழ்ந்தது. ஆசியாவின் குறிப்பாக இந்திய உபகண்டத்தின் பொதுப்பண்பிற்கேற்ப சிற்றரசுகளூடாக இவ் இறைமை செயற்பட்டது.

மானிடவியல் நோக்கில் பார்ப்பினும் பழங்குடிமக்கள் குழுநிலை அரசுகளையே தோற்றுவித்தனர். எனவே உலகின் பழங்குடிகளில் ஒன்றாகிய இலங்கைத் தமிழரும் சிற்றரசுகளூடாகத் தமது இறைமையை பிரயோகித்தனர். யாழ்ப்பாண அரசு, வன்னி அரசு, கோறளைப்பற்றுக்கள் என்பன முக்கியமான அரசுகள்.

போத்துக்கேயர், ஒல்லாந்தர் தமிழ்ப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பொழுதும் வணிகமே அவர்களது நோக்காக இருந்ததினால் உள்ளூர் முக்கியஸ்தர்களூடாக இறைமை பிரயோகம் நடைபெற அனுமதித்தனர்.

இதனாலேயே பிரிட்டிஸார் இலங்கையைக் கைப்பற்றும் பொழுது கூட வன்னிப் பிரதேசம் பூரண இறைமையுடன் திகழ்ந்தது. பிரிட்டிஸார் 1815 ல் கண்டியின் இறுதி மன்னனாகிய தமிழ் நாட்டைச் சேர்ந்த கண்ணுசாமி என்னும் சிறீ ராஜராஜசிங்கனை வெற்றி கொண்டனர். (இவ்வரசன் பிரிட்டிசாரிடம் இறைமையை ஒப்புவிக்கும் ஆவணத்தில் தமிழிலேயே கையெழுத்திட்டுள்ளான்)

ஆயினும் வன்னியின் சிற்றரசன் பண்ணடாரவன்னியன் 18-32 வரை சுமார் 17 வருடங்கள் சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஸ் பேரரசை எதிர்த்து தனது இறைமைக்காகப் போராடினான். பதுங்கித் தாக்குதல், கெரில்லாத் தாக்குதல் போன்ற போர்முறைகளைக் கையாண்டதுடன் பெண்களும் களம் புகுந்தனர் என வரலாறு கூறுகிறது.

எனவே பிரிட்டிசார் தமிழீழத்தின் இறைமையைப் புறம்பாகவும் சிங்கள நாட்டின் இறைமையைப் புறம்பாகவும் கைப்பற்றினர் என்பது ஆதாரபூர்வமான உண்மை.

ஆனால் 1833 ல் கோல்புறூக்

www.tamilarangam.net



அரசியல் சீர்திருத்தத்தின் மூலமே பிரிட்டிசார் தமிழீழத்தின் இறைமையையும் சிங்கள நாட்டின் இறைமையையும் ஒன்றிணைத்தனர். நிர்வாக வசதிக்காக இதனைச் செய்வதாகவே விளக்கமளித்தனர்.

பிரிட்டிசார் தமது ஆட்சிக்கு மதியுரை குழுவாக சட்டவாக்க சபையை நிறுவி இலங்கையரை நியமித்த பொழுது சிங்களவர், தமிழர், பறங்கியர் என்பவர்களின் பிரதிநிதிகளாக ஒவ்வொருவரையே நியமித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு முஸ்லீம்கள் இடம் பெறாமை அவர்கள் தேசிய இனமல்ல என்பதைத் தெளிவு படுத்துகிறது.

1910ல் மனிங் சீர்திருத்தத்தின் மூலம் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகம் செய்யப்பட்டது. இதில் தமிழர்-சிங்களவர் களுடைய பிரதிநிதிகளே அதிகளவில் இடம் பெற்றனர். இங்கு முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் வணிகரீதியான சமூகப் பிரதிநிதியாகவே அனுமதிக்கப்பட்டார். 1921ல் மனிங் 2வது சீர்திருத்தத்தின் மூலம் படித்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கியதன் மூலம் இலங்கையில் மேல்மட்ட வர்க்கத்தவர்களில் சட்டவாக்க அதிகாரம் சென்றடைய வழிவகுத்தனர். இதனால் ஆங்கில கல்வி மூலம் வளர்ச்சியுற்ற ஒரு சமுதாயம் முதலாளித்துவ உணர்வோடு தனது பிரச்சனைகளே நாட்டின் பிரச்சனை என்ற ரீதியில் தீர்வுகள்காண வழி பிறந்தது. 1930ல் டொனமூர் அரசியல் சீர்திருத்தம் தமிழரின் இறைமையை சிங்களவரிடம் அடகு வைக்கும் வேலையைச் செய்தது. அதுவரை வகுப்புவாதப் பிரதிநிதித்துவமாக இருந்த இறைமைச் செயற்பாட்டை பிரதேசரீதியான (சனத்தொகைக்கேற்ப) பிரதிநிதித்துவமாக மாற்றியது. இதனால் தமிழர்களினது இறைமையையும் சிங்களவர்களது இறைமையும் சரிநிகர் பலத்துடன் நின்ற நிலை மாறி சிங்களவரின் இறைமை தமிழர்களின் இறைமை மேல் ஆதிக்கம் செலுத்தக்கூடிய சூழ்நிலை தோன்றியது. இதன் விளைவாக தனிச்சிங்கள மந்திரிசபை தோற்றம் பெற்றது. இதனால் சட்டவாக்க நிலையிலும் நிர்வாக நிலையிலும் பெரும்பான்மையினராக சிங்களவர் கை மேலோங்கியது.



"எங்களது உறக்கம் உங்களது விடியலுக்கே,
எங்களது புதைகுழிகள் புலரும் புதுயுகத்தின் விதைகுழிகள்
எங்களது கல்லறைகள் காலத்தின் கருவறைகள்
எங்களது மரணங்கள் வீரமறவரின் ஜனனங்கள்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1948ல் சோல்பரி அரசியலமைப்பின் மூலம் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்ட நேரத்தில் சிங்களப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டி தமிழர்கள் இறைமை பறிக்கப்படும் என வாதாடினர். இந் நேரத்தில் சோல்பரி அரசியல் அமைப்பை உருவாக்கிய பிரிட்டிஸ் அரசு, 29 வது சரத்து ஒன்றை அவ் அரசியல் அமைப்புள் புகுத்தி தாம் இச் சரத்தின் மூலம் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பளிப்பதாக உறுதி கூறியது. அதாவது சுதந்திர இலங்கை பாராளுமன்றத்தில் சிறுபான்மையினருக்கு எதிரான சட்டங்கள் ஏதாவது நிறைவேற்றப்பட்டால் பிரிட்டிஸ் அரசு தலையிட்டு அதனைத் தடுத்து நிறுத்தலாம் என்பதே அப்பாதுகாப்பு.

இதனாலேயே இலங்கைக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரத்தை வழங்கும் அரசியல் சாசனமாக "சோல்பெரி" அரசியல் அமைப்பு வர்ணிக்கப்பட்டது.

ஆனால் சிங்களம் மட்டும் சட்டத்திற்கெதிராக கோடீஸ்வரன், இலண்டன் பிரிவுக் கவுன்சிலில் வழக்குத் தாக்கல் செய்ததும் அவருக்குச் சாதகமாக இலங்கை அரசுக்கு எதிராக பிரிட்டிஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்ததும் இதனால் இலங்கையில் சிங்கள அரசு சோல்பரியாப்பையே தூக்கியெறியும் முகமாக சிறீலங்காவை குடியரசாக்கத் துணிந்ததும் வரலாறு. 1972 ல் தமிழர்களது பங்கேற்பு இல்லாமல் சிங்களவர்கள் சிறீலங்காவுக்கான அரசியலமைப்பை வகுத்துக் கொண்டனர். இதனால் தமிழர்களது இறைமை அபகரிக்கப்பட்டு தமிழர்கள் அரசற்ற நாட்டினமாக மாறினர்.

தங்களது இறைமையை மீட்டெடுக்கத் தமிழர்கள் ஜனநாயகத்துக்கு உட்பட்ட வழிகளில் ஏடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் சிங்கள பேரினவாதத்தால் தட்டிக்கழிக்கப்பட்ட நிலையில் தமிழர்கள் தமது இறைமை, நில ஆதிக்கம், மக்கள் பாதுகாப்பு என்பவற்றை மையமாகக் கொண்டு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆகவே தான் மண்மீட்புப் போரான இப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக இருந்தாலும் அது சட்டபூர்வமானதாக உள்ளது.

சிறீலங்காவின் அரசியல் சாசனம் தமிழர்களையோ, தமிழீழத்தையோ எவ்வகையிலும் கட்டுப்படுத்தவில்லை. மாறாக இவ் அரசியல் சாசனத்தின் மூலம் சிங்கள ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டது. ஆகவே அரசற்ற ஒரு நாட்டினம் தனக்கான அரசை அமைக்க முயன்றது சர்வதேச நியதிகளுக்குட்பட்டதாக கருதப்படுகிறது.

எனவே ஒரு தமிழீழ இறைமை பிரிட்டிசாரால் மீளளிக்கப்படாத நிலையில் தமிழீழ மக்களால் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டுக்குப் பின் தமிழீழ மண்ணில் சிங்கள அரசின் இறைமை, தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. தமிழீழ மண்ணில் சிங்கள அரசின் எந்தச் சட்டமும் இன்று நடைமுறையில் இல்லை. கடந்த பத்தாண்டுக்கு மேலாக இந்நிலை அதாவது சிங்கள அரசின் சட்டங்கள் செல்லுபடியாகாத நிலை தொடர்ந்து வருகின்றது. இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்திற்கு தலைவணங்கியும், வரிசெலுத்தியும், சட்டங்களை ஏற்று நடந்தும், நிர்வாகப் பங்களிப்பைச் செய்தும் தமது அரசாங்கமாக தமிழீழ விடுதலைப் புலிகளைக் கருதுகின்றனர். அதாவது பிரகடனப் படுத்தபடாத "தமிழீழம்" தமிழ்

## ஆசீர்வாதம்

வடபிராந்திய இராணுவத் தளபதி டென்சில் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்ன ஆகியோரின் ஏற்பாட்டின் பேரில் வடபகுதி முகாம்களுக்கு விஜயம் செய்த மல்வத்த நாயக்கர் விபஸிதேரர், இராணுவ பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்வையுற்றார். தொலை நோக்கும் கருவியால் விடுதலைப் புலிகளின் காவல் நிலைகளையும் நன்கு கவனித்த தேரர், யுத்தத்தில் வெல்ல படையினருக்கு ஆசிவழங்கினார்.

இலங்கைக்குப் பொருளாதார உதவிகளையும், வர்த்தக வாய்ப்புக்களையும் வழங்கிவரும் அமெரிக்கா, சிறப்புப் பெற்றுவிளங்க கொழும்பு பௌத்த பிக்குகள் இடையறாத பிரார்த்தனையில் இறங்கியுள்ளனர். அமெரிக்காவை ஆசீர்வதிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் இப் 'பிரித்' ஓதும் வைபவம் ஒரு வருடத்திற்கு தொடர்ந்து இடம்பெறும் எனவும் பௌத்த பிக்குகள் அறிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் நடைமுறை அங்கமாக உலகநாடுகளிடை காணப்படுகிறது. தமிழீழ மக்கள் இத் தமிழீழத்தின் மீதான சிங்கள ஆதிக்கத்தையும், ஆக்கிரமிப்பையும் "மண்மீட்புப் போரின்" மூலம் தடுத்து வருகின்றனர். தமிழீழ மக்களுக்கான "பொலிஸ்" நிர்வாகமும் சிறப்புற நடைபெற்று வருகிறது. பொருளாதாரத் திட்டங்கள், மக்கள் நலன்பேறு திட்டங்கள் விடுதலைப் புலிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே தமிழீழத்திற்கான அரசாங்கமும் செயற்படுகின்றது.

ஆக மொத்தமாக மக்கள் தொகுதி, நாட்டெல்லை, இறைமை, அரசாங்கம் எனும் நான்கு பண்புகளும் பொருத்தப்பட்ட நிலையில் தமிழீழம் ஒரு நாடாகவே காணப்படுகிறது.

இதனாலேயே இன்று சர்வ தேச ரீதியில் அமைதிக்கென மேற்கொள்ளப்படும் முயற்சிகள் ஐக்கிய இலங்கை எனும் அரசியல் அமைப்புக்குள் எடுக்கப்பட முடியாது.

ஒன்றில் இரு நாடுகளின் கூட்டிணைவாகவோ அல்லது தனித்தனி இறைமை நிலையை அங்கீகரிக்கும் ஒரு நாட்டின் கூட்டமைப்பாகவோ அல்லது தனி நாடுகளாகவோ மட்டுமே தீர்வு முன் வைக்கப்படலாம் என சர்வதேச அவதானிகள் கருதுகின்றனர். தமிழீழத் தேசிய இனமாகிய தமிழ் மக்களைக் கொண்டு உருவாக்கப்படும் அரசாங்கமே, தமிழீழத்திலுள்ள இனக்கூறுகளான முஸ்லீம்கள், சிங்கள சிறுபான்மையினர்க்கான நீதியானதும் அமைதியானதுமான ஆட்சியை தமிழீழ அரசியலமைப்பு மூலம் வரையறை செய்யக்கடமையும், உரிமையும் உள்ளதாகக் காணப்படுகிறது. ■

## போராட்டம்?

தாண்டிக்குளம் தடைமுகாமில், வடக்கில் இருந்து கொழும்பு செல்ல வந்த தமிழ் மக்களையும், கொழும்பில் இருந்து வடக்கு நோக்கி செல்ல வந்த மக்களையும் ஒரு இடத்தில் கூடும்படி இராணுவத்தினர் உத்தரவிட்டனர். மக்கள் மிகுந்த பயப்பீதியுடன் தயங்கித் தயங்கி இராணுவத்தினர் குறிப்பிட்ட இடத்தில் கூடுகின்றனர். இராணுவ கமாண்டர் டென்சில் கொப்பேகடுவ பாதுகாவலர் சகிதம் வருகின்றார். தமிழ் மக்களுடன் கருத்துப்பரிமாற விரும்புவதாக புன்சிரிப்புடன் தெரிவித்தார். கூடியிருந்த மக்களுக்கு அவரது புன்சிரிப்பில் அவ்வளவாக நம்பிக்கையில்லை. அந்தச் சிரிப்பு அவர்களை மேலும் பயமுறுத்துவதாகவே உணர்ந்தனர். பெரும் விபரீதம் நடக்கப்போவதாகவே அஞ்சினர். உரத்த குரலில் கொப்பேகடுவ பேசத் தொடங்கினார். அவரது நீண்ட பிரசங்கம், தமிழ் குழுவைச் சேர்ந்த ஒருவரால் மொழிபெயர்த்துச் சொல்லப்படுகின்றது. மக்கள் பயப்பீதியால் அசையாமல் இருந்து அவரது பிரசங்கத்தை செவிமடுத்தனர். இராணுவக் கமாண்டர் திருப்தியுற்றார். மக்கள் தனது தந்திரப் பேச்சுக்கு இரையாகிவிட்டனர் என்பதாய் அவர் திருப்தியுற்றார். இறுதியாக மக்களை மேலும் நெருங்கி,

"விடுதலைப் புலிகள் தங்கள் நாட்டுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் சண்டைபிடிக்கின்றார்கள்; சரி. நாங்கள் எங்களது நாட்டுக்காகவும், எங்களது சம்பளத்திற்காகவும் சண்டைபிடிக்கின்றோம். ஆனால், இடையில் இருப்போர் எதற்காகச் சண்டைபிடிக்கின்றார்கள்?"

கமாண்டர் ஏதற்காக அப்படிக் கேள்வியெழுப்பினாரோ தெரியவில்லை.
கூட்டத்தில் இருந்த சிலர் "சுர்" என எழுந்தனர்,

"சுயநலத்திற்காக"

அவர்கள் ஒன்றாகவே, ஒத்துக் குரல் கொடுத்தனர்.
கொப்பேகடுவ சிரித்தபடி இடத்தைவிட்டகன்றார்.

அன்று இரவு, அவர்களுக்கு அர்ச்சனையுடன் கூடிய பலமான தமிழ்ப் பூசை நடந்தது.

தகவல் : கரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# மனித உரிமையும் அரசியல் கட்டுமானங்களும்



தமிழீழ விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சிவில் நிர்வாக, அரசியல், நீதித்துறைக் கட்டுமானங்கள், சிறந்த அரசியல் முன்னெடுப்பாக அரசியல் நோக்கர்களால் கணிக்கப்படுகின்றது. பரந்த நிலப்பரப்புகளை தனது கட்டுப்பாட்டுள் நீண்ட காலம் வைத்திருத்தல் என்பதோடு, அப்பகுதிகளில் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு உருவாக்கப்படும் அரசியல், நீதிபரிபாலன கட்டுமானங்கள், தமிழீழ அரசின் படிப்படியான உருவாக்கத்தை நிதர்சனப்படுத்துவதாக உள்ளன. பொலிஸ் நிர்வாகம், சிறைநிர்வாகம், நீதிமன்றங்கள் சிறப்பாக செயல்பட ஆரம்பித்துள்ளன. காவல் துறையினால் பல்வேறு சமூக விரோத நடவடிக்கைகளும், குற்றச் செயல்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; தடுக்கப்பட்டுள்ளன. குற்றம் செய்தோரை, உள்ளூர், சர்வதேச சட்ட வரையறைக்குள் நீதி விசாரணைக்குட்படுத்தும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. - சிறை வைக்கப்பட்டோரை உறவினர்கள், மனித உரிமை அமைப்புகள் சென்று சந்திக்கும் நிகழ்வுகளும் நடந்துள்ளன. 43 சிங்களப் பொலிசாரை, தலைவர் பிரபாகரன், அவர்களது உறவினர்களிடம் கையளிக்க விருப்பம் தெரிவித்தும், ஸ்ரீலங்கா அரசின் அசட்டையினால் அது நடைபெறவில்லை. பெண்களை இம்சைப்படுத்தும் பேர்வழிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, சர்வதேச பெண்கள் தினம் பங்குனி 8ம் திகதி கொண்டாடப்பட்ட இவ்வேளையில், காவல்துறைத்தலைவர் திரு. நடேசன் அறிவித்திருந்ததும் பொருத்தமாகவே உள்ளது. விடுதலைப்புலிகள் மீது மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகளை சில மனித உரிமை அமைப்புகள் சுமத்துகின்றன. சர்வதேச மன்னிப்புச் சபையும் இக் குற்றச்சாட்டுக்கள் சிலவற்றை சுமத்தி உள்ளது. அவ்வாறான மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதைத் தடுக்கும் செயற்பாடாகவே, இச்சிவில் நிர்வாகக் கட்டுமானங்கள் அமைகின்றன.

முன்னைய காலத்தில், அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கங்களுக்கு எதிராகவே மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுகள் இருந்தன. தற்போது, விடுதலைப்போரை நடத்தும் அமைப்புகளுக்கு எதிராகவும் குற்றச் சாட்டுக்கள் வைக்கப்படலாம் என்றும், அவ்வமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு அவ்வமைப்புகளே பொறுப்பு என்றும் நடைமுறை ஏற்பட்டுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை, ஜப்பான் மகாநாட்டில் எடுத்த தீர்மானத்தின் பின்னரே இத்தகு சூழ்நிலை தோன்றி உள்ளது. தனிமனிதன் செய்யும் தவறுகள் குற்றவியல் குற்றங்களாகவும், அரசுகள் புரியும் தவறுகள் மனித உரிமை மீறுதல்களாகவும் கருதப்பட்டு வந்தன. எனவே விடுதலைப் புலிகள் மீது அக்குற்றம் சுமத்தப்படுமானால், விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓர் அரசாக அங்கீகரித்தே அவ்வாறு நடைபெறுவதாகக் கருதலாம், அல்லாது போனால், அதன் கட்டுப்பாட்டில் ஒரு நிலைப்பகுதி உள்ளது என்பதையாவது ஏற்றுக் கொண்டதாக கருதலாம். எனவே, மனித உரிமை மீறல்களை குறித்து, விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தும் சர்வதேச அமைப்புக்கள், அம்மனித உரிமை மீறல்களை தடுக்கும் பொருட்டு, விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்படும் சமூக, அரசியல் கட்டுமானங்களை அங்கீகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. அதாவது, ஓர் அரசுக்குரிய கட்டுமானங்களை அவர்கள் விரும்பியோ, விரும்பாமலேயோ ஏற்று, விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கும் நிலை ஏற்படுகின்றது. இந்திய அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றிக் குறிப்பிடும்போது, அமெரிக்க நிர்வாக அதிகாரி ஒருவர், இந்திய அரசு மனித உரிமை மீறல்களைத் தடுக்க விரும்பிய போதிலும், பரவலாக்கப்பட்ட அதிகாரத்தின் விளைவாக கீழ்மட்டங்களில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் அரசாங்கத்துக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதாக வக்காலத்து வாங்கினார். சர்வதேச சட்டங்களுக்கு கட்டுப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசுகளே, தமது நிலையான கட்டமைப்புகளின் மூலம் மனித உரிமை மீறல்களைத் தடுக்க முடியவில்லை எனத் தப்பித்துக் கொள்கின்றன. ஆயினும் பல்வேறு நிர்ப்பந்தங்களுக்கிடையில், நிலையற்ற தன்மைகளுக்கிடையில், அரசாக சர்வதேச அங்கீகாரம் பெறாத விடுதலைப் புலிகள் அமைப்பு -சர்வதேச சட்டங்களுக்கு அமைய, மனித உரிமைகளைப் பேண எடுக்கும் நடவடிக்கைகள் பாராட்டப்படவே வேண்டும். ■

www.tamilarangam.net





# அறுகுபோல் வேர் பரவி

சிறுகதை

புனிதன்

"போவோமா பொன்னுலகம்...." இரசனை மிக்க அந்தப் பாடல் "அகாய்" செற்றின் மின்விளக்கின் வண்ணஜால சிலுமிசங்களுடன் சங்கமித்து நெஞ்சைக் களவாடிக் கொண்டிருந்தது. பாடலில் தன்னை இழந்தவனாய், எனினும் நிதானமாய் முகச்சவரம் செய்துகொண்டிருந்தான் கரிகாலன். முன்பெல்லாம் பல தடவைகள் இந்தப் பாடலைக் கேட்டபோதும் பெரிதாக எதனையும் உணராத அவனில், இப்பொழுது, அந்தப் பாடலின் ஒவ்வொரு வரிகளும், இசைச் சேர்க்கைகளும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதை அவனால் உணரமுடிந்தது. அவனது கஸ்தூரி தனது கடிதத்தில் இந்தப்பாடலின் சில வரிகளை, தனது கனவுகளோடு கலந்து வரைந்ததுதான், இந்தப் பாடல் மீதான அவனது அதீத மோகத்திற்குக் காரணம்.

இந்தப் பாடலை கேட்கும்போதெல்லாம், சில வருடங்கள் பின்நோக்கிச் சென்று தன் கடந்தகால வாழ்க்கையின் இன்பங்களை நுகர்ந்துகொள்வான் கரிகாலன்.

வன்னிப்பிராந்தியத்தில் சமணன்குளம் அவன் சொந்த ஊர். அடர் காட்டுப்பகுதிகளையும், பசுமையான நெல் வயல்களையும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் இயற்கை வனப்பையும் கொண்ட அந்தப்பசுஞ்சோலை என்றும் இளமையாகவே காட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிதரும். ஒரேயொரு மகன் ஆதலால் அத்தனை சுமைகளும் இவன்மீது. தந்தையரை குடி குடிக்கத் தொடங்கியதால், அந்தச் சுமையின் அழுத்தம் இன்னும் அதிகமானது. சமூக, குடும்ப சங்கடங்களுக்குள் சிக்கி அவனது தாயார் நிரந்தர நோயாளியாகிவிட்டார். அளவான படிப்புடன், ஊரில் பெரிய மனிதர்களின் வயல்களில் வேலை செய்தும், காடுகளில் வேட்டையாடியும் தனது குடும்பத்தை சுமக்க ஆரம்பித்தான் கரிகாலன். காட்டானையின் பிளிறல், கோட்டானின் கீதம், கொடும்புலி உறுமல், இன்னும் காட்டின் உயிர்த்துடிப்புள்ள ஒலிகள் சங்கீதம் போன்றவை. இந்த வன மகோச்சவங்களை ரசித்துக்கொண்டு வேட்டையாடுவதென்பது அவனின் சுகமான பொழுதுபோக்கு.


மழை விட்டு விட்டுச் சிணுங்கிக்கொண்டிருந்தது. மெல்லிய தென்றல், அந்திப்பொழுது; வேட்டையாடிய மானை தோளிலே சுமந்தபடி, வயற்பரப்பில் வகிடெடுத்துநின்ற வரம்பில் நடந்து வந்துகொண்டிருந்தான் கரிகாலன். எதிரே வந்துகொண்டிருந்தாள் கஸ்தூரி. குறும்புக்காரி; ஊரார் எல்லோரும் அவளது குறும்புத்தனத்தை பொய்க்கோபத்தோடு ரசிப்பார்கள். கஸ்தூரியை இவ் வரம்பில் சந்திக்கும்போதெல்லாம், அவளது குறும்புக்குப் பயந்து வரம்பை விட்டு இறங்கி வழிவிட்டுவிடுவான் கரிகாலன். ஆனால் இன்று, இரவும் பகலும் உரசிக்கொள்ளும் அந்திப்பொழுதில், இந்த அதிசயத்தை, இருமருங்கும் நின்ற விடலைப் பருவத்து நெற்கதிர்கள் பார்த்து நாணின.

"என்றுமில்லாதவாறு இன்று என்ன வழிவிட்டு நிற்கிறாய்?"

"எல்லாம் என் புருஷனுக்கு மரியாதைதான் " வெட்கம் மேலிட்டவள்போல நிலத்தில் காலாலே சித்திரம் வரைந்தாள்.

அவளின் குறும்புத்தனமாக இதனையும் எண்ணிக்கொண்டு, பதிலுக்கு ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு அவன் நடந்தான்.

"ஏய்யா நீயும் ஒரு ஆம்பிளையா? உனக்கு எதக்கெல்லாம் ஒரு மீசை? கழுத்தில தாயத்து வேற. . . " அவள் பொய்யாகத் திட்டிக்கொண்டு, மனதுக்குள் சிரித்தபடி நடந்தாள்.



**"என்றுமில்லாதவாறு இன்று என்ன வழிவிட்டு நிற்கிறாய்?"**
**"எல்லாம் என் புருஷனுக்கு மரியாதைதான். "**

வைகறைப்பொழுது, அந்தக் கிராமம் விழித்துக்கொள்வதற்கு முன்னரே சுற்றிவளைக்கப்படுகின்றது. பசுமையான அந்தக் கிராமத்தை இராணுவச் சப்பாத்துக்கள் மிதித்துச் சிதைத்தன. போராளிகளை வேட்டையாடப் போகின்றோம் என்றுகூறி அத்தக்கிராமத்தை துப்பாக்கி நுனியில் நிறுத்திவைத்தது சிங்கள இராணுவம். நாட்டுத் துப்பாக்கியுடன் நிஜவேட்டைக்குப் புறப்பட்டுத் திரும்பிய கரிகாலன், ஏதும் அறியாதவனாய் வீட்டின் முன்பகுதிக்கு வந்தான்.

"இவன்தான்"

ஒவ்வொரு மறைவிடங்களில் இருந்தும் துப்பாக்கிகள் சடசடக்கின்றன. காட்டு விலங்குகளிடம் இருந்து, காத்துக்கொள்ளும் பயிற்சி அவனைத் தூண்டியிருக்கக்கூடும்; காற்றுவேகத்தில் தாவிக் குதித்து வீட்டின் பின்புறம் ஓடி மரங்களில் கலந்துவிட்டான்.

அவனைச் சுற்றி அந்தக் கிராமம் சூழ்ந்துகொண்டது. இராணுவத்தால் விரட்டிச் செல்லப்பட்டவன் இறந்தானோ உயிருடன் இருக்கின்றானோ என்று தெரியாமல் கலங்கிநின்ற அவன் சுற்றம் அவனைக் கண்டதும், துக்கம்மேலிட அழுதேவிட்டது. அவன் ஏதும் அறியாதவனாய் தனது வீட்டை நோக்கினான். வீடு எரியுண்டு, எரியாத பகுதிகள் அவலமாய் நின்றன.

அவன் படபடப்புடன் ஓடிச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்று, தனது தாய் தந்தையரைத் தேடினான். இரத்தத்தை உறையவைக்கும் அந்தக் கொடிய காட்சியை காணச் சகிக்காமல், தன் முகத்தை இருகைகளாலும் மூடியபடி, உலகம் அதிரக் கத்தினான்.

"அம்மா. . . . "

வெளியில் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு நினைவுக்குத் திரும்பியவன்; ஓ! இவ்வளவு நேரம் முகச் சவரம் செய்திருக்கின்றேனே என்று தனக்குள் சலித்துக்கொண்டான்.

முகத்தை அவசரமாகத் துடைத்தபடி கதவைத் திறந்தான்.

"ஓ! சேரனே; என்ன மச்சான், கடிதம் வந்ததே?" கஸ்தூரியின் கடிதங்கள் சேரனின் முகவரிக்கே வருவதாலும், கடிதங்கள் வராவிட்டால் சேரனும் வருவதில்லை என்ற நினைப்போடும் கேட்டான்.

"இந்தா! கடிதம் ஒண்டு வந்திருக்கு; வேலைக்கு அவசரமா போகோணும். நேற்று நேரம் போச்சுதெண்டு கொஞ்சக் கோப்பையளை தொட்டிக்க போட்டுட்டு வந்தனான்" சேரன் பதிலுக்குக் காத்திராமல் வேகமாக வெளியேறினான்.

நான்கு மாதங்களின் பின் கஸ்தூரியின் கடிதம் வந்திருக்கின்றது. உள்ளக் களிப்போடு, கைகள் பரபரக்க கடிதத்தை பிரித்தான். அவனது கற்பனைப்பறவை ஆலோலம் பாடிப் பாடி வானில் சிறகடித்துப் பறந்தது. தொலைபேசி சிணுங்கித் தொலைக்கக்கூடும் என்ற முன்னெச்சரிக்கையுடன் தொலைபேசி இணைப்பை கழற்றி விட்டு கதிரையில் சாய்ந்தபடி படிக்க ஆரம்பித்தான்.

அன்பின் கரிகாலனுக்கு. .

உங்களின் முகமிழந்த அஜந்தா ஓவியம் எழுதுகின்றேன். அழகு ஓவியமாய் உங்களால் வர்ணிக்கப்பட்டவள், இன்று சிதைந்த ஓவியமாய் ஊராரால் சிறுமைப் பார்வையால் சுட்டெரிக்கப்படுகின்றேன். உங்களது உடலைப் போல் உள்ளத்தையும் திடப்படுத்திக்கொள்ளுங்கள். இது எனது இறுதிக்கடிதம். மனதைத் திடப்படுத்திக் கொண்டு தொடர்ந்து வாசியுங்கள்.


**அவனைச் சுற்றி அந்தக் கிராமம் சூழ்ந்து கொண்டது. இராணுவத்தால் விரட்டிச் செல்லப்பட்டவன் இறந்தானோ உயிருடன் இருக்கின்றானோ என்று தெரியாமல் கலங்கி நின்ற அவன் சுற்றம் அவனைக் கண்டதும், துக்கம்மேலிட அழுதே விட்டது. அவன் ஏதும் அறியாதவனாய் தனது வீட்டை நோக்கினான்.**

உங்களுடன் தொலைபேசியிலாவது கதைக்கவேண்டும் என்ற ஆவலில், கொழும்பு வருவதற்காக மீரா மச்சாளுடன் வவுனியா வந்தேன். எவ்வளவு கற்பனைகளை நெஞ்சில் சுமந்து வந்திருப்பேன். . .

ஆனால் எல்லாம் சிதைந்துவிட்டது. வவுனியா தடைமுகாமில், இராணுவத்துடன் வந்த தமிழ்த் துரோகி ஒருவன் எங்களை அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காட்டினான். அந்தளவு போதும் தானே அந்த மனித மிருகங்களுக்கு. . . .

உணர்வுகள் இறந்த நிலையில் ஊர்வந்தேன். என்னை அழித்துக்கொள்ள வேண்டும் என்று பல முறை சிந்தித்தேன். என்னால் முடியவில்லை. ஏன் நான் இறக்கவேண்டும்? என்னை மானபங்கப்படுத்திய அக்கயவர்களை அழிக்கப் புறப்பட்டு விட்டேன். ஆயிரமாயிரமாய் துவக்கேந்திநிற்கும் போராளிகளுடன் கலந்துவிட்டேன். எனது முடிவு உங்களுக்கு அதிர்ச்சியாகக்கூட இருக்கலாம். என்னசெய்வது. எமது வாழ்வை உறுதிப்படுத்த இதைவிட வேறுவழி எனக்குத் தோன்றவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள்.

இப்படிக்கு,
கஸ்தூரி.



நீர்த் திவலை கண்ணை மறைக்க கடிதத்தைப் படித்து முடித்தான். கடலலைபோல் ஆர்த்தெழுந்த கவலையையும் மீறி பெருமை அவனுக்கு. என் காதலி துணிந்து, துப்பாக்கி ஏந்தி போருக்குப் புறப்பட்டுவிட்டாள். அவளை மன்னிக்க அவள் என்ன குற்றம் செய்தாள்; மாறாக அந்தத் தகுதி பெற்றவனல்லவே நான்.

அவன் ஒருவிதமான உணர்வுக் கொந்தளிப்பால் களைப்புற்று சிறிது கண்ணை மூடினான்.

அவள் துணிந்துவிட்டாள்; புறநானூற்றுப் பெண்போல துணிந்துவிட்டாள். ஆனால் நானோ கோழையின் அகராதி ஆகிவிட்டேனே.... இல்லை! நான் கோழையில்லை! நம் வாழ்வை உறுதிப்படுத்தும் தேவையும் கடமையும் எனக்குமுண்டு. நான் கோழையாக இருக்கமாட்டேன்.

கரையைத் தொட்டு அந்த அதிவேகப்படகு கம்பீரமாகவே நின்றது. சக்திவாய்ந்த எஞ்சின்கள் பொருத்தப்பட்டிருந்த அந்தக் கப்பல் ஆர்ப்பரித்து எழுந்து குதிக்கும் இராட்சத அலைகளைக் கிளித்துக்கொண்டு செல்லும் கர்வத்துடன் காத்திருந்தது. கரிகாலன் மெல்ல அதில் கால் வைத்தான். உடலில் புதுவிதமான உணர்ச்சி. மேலும் பன்னிரண்டு போராளிகள் படகினில் ஏறியதும், படகோட்டி எஞ்சினை முடுக்கிவிட்டார். படகின் முன் அணியத்தில் கறுப்பு பார்ப்பவர் ஏறிநின்று தூரத்தே உற்று நோக்குகின்றார். படகு வேகமாக அலையைக் கிளித்துக்கொண்டு தமிழீழ கடல் எல்லைக்குள் நுழைகின்றது. அந்த இரவு வேளையிலும் கறுப்புப் பார்ப்பவர் மிகுந்த அவதானமாக நோக்கியவர்.

”மச்சான் பெரிய கறுப்பு வருகுதடா”

கரிகாலனுக்கு உடல் சில்லிட்டது. என்ன நடக்குமோ?

”வெட்டி ஓடு, வெட்டி ஓடு” முன் அணியத்தில் நின்றவர் பரக்கப்பரக்க குரல் கொடுத்தார்.

ஏனைய போராளிகள் துப்பாக்கிகளாலும், ஆர். பி. ஜிக்களாலுந் தாக்கத் தொடங்கினர். எதிரே வந்த கடற்படைக் கப்பலை நோக்கி சீறிப்பாய்ந்த எம்மவரின் தோட்டாக்கள் அவர்களைப் பணியவைத்துவிட்டது. பரந்த கடற்பரப்பில் சில நிமிடநேரம் நடந்த கடல்சமரில், இறுதியில் எதிரி பின்வாங்கிக் கொண்டான்.

நீரைக்கிழித்துக்கொண்டு முன்னிலும் வேகமாகச் சென்ற படகு ஈழத்து மண்ணின் வடகரையைத் தொட்டுநின்றது. வெளிநாட்டு மோகத்துடன் புறப்பட்டுச்சென்றவன் கனத்த ஆயுதத்துடன் ஒரு போராளியாய் உரிமைமீட்கும் தாகத்துடன் காலடி எடுத்துவைக்கின்றான்.

எதிரே போராளிகளின் சமாதி; அவனுடன் வந்தவர்களைப் போல் அதன் முன்றலில் நின்று அவனும் வணக்கம் செலுத்துகின்றான். ”இந்த மண்ணிற்காக தம்மை ஒப்படைத்துவிட்டவர்கள் இவர்கள்”, அவனது மனம் உள்ளூர கசிந்துகொண்டது.

போராளிகள், பொதுமக்கள் சூழ்ந்துவர, ஒரு போராளியின் உடல் காவிவரப்படுகின்றது. அங்கே ஏற்கனவே தோண்டி வைக்கப்பட்ட புதைகுழியில் உடல் இறக்கப்படுகின்றது.

எதிரே நினைவு அட்டை; பிறப்பு, இறப்பு, வீரமரணம்... இதயம் ஒருகணம் நின்றே போனது... ”எனது கஸ்தூரி” வாய்விட்டு அழவேண்டும் போல் இருந்தது அவனுக்கு.


மனம் விம்மி விம்மி அழுதது; ”பிணமாக என்னவள்”

மூன்றுபிடி மண் எடுத்து பிணமாகக்கிடக்கின்ற தன் ஆருயிர்க் காதலிமேல் போட்டான். சோகம் நெஞ்சை கோரமாகப் பிடித்துலுக்கியது.

சுழன்றடிக்கும் அந்தச் காற்றிடை மற்றவர்களுடன் அவனும் புறப்பட்டான்.

”மச்சான் நேற்று நடந்த முகாம் தகர்ப்பில, எங்கடவெற்றிக்கு கஸ்தூரிதான் மச்சான் பெரும் காரணம்” அந்தப் போராளி பெருமையோடு கஸ்தூரியின் நினைவை மீட்டுக்கொண்டு முன்னால் சென்றான்.

அவனது இதயம் இலேசானது. முன்னிலும் பன்மடங்கு உத்வேகம். அவன் நிதானமாக, அமைதியாக நடந்துகொண்டிருந்தான். ■



அடுப்பங்கரையில் உறங்கிக் கிடந்து
அழிந்தது போதும் எழுவாய்.
விடுதலை தேடும் புலிகளின் பாசறை
வீடுகள் தேடி வருவாய்.

TAMIL EELAM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழினியன்




# தொடரும் வதைகள்

தமிழீழவிடுதலைப்புலிகள்-சிறீலங்கா அரசபடையினருக்குமிடையிலான மோதல்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவம், நடாத்திய வெறியாட்டத்தினால் அம் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு விசாரனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட சுமார் 3000 தமிழர்களில் 1315 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். ஏனையோர் தொடர்பான தகவல்கள் இல்லை. அவர்களும் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டோ அல்லது புதைக்கப்பட்டோ இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

சிறீலங்காப் படையினரின் இப் பயங்கரவாத வெறித்தனத்துக்கு, அவர்கள் ஆயுதப்படையினர் என்பதுடன் அவர்கள் பேரினவாதிகளாகவும் இருப்பதே காரணம். சிறீலங்காப் படையினரின் தமிழின அழிப்பிற்கு தமிழ் விரோதக் குழுக்களும் ஒத்துழைப்பு நல்கிவருவது வேதனையான உண்மை. 1990 ஆனியில் இருந்து 1991 சித்திரை வரையான காலப்பகுதிவரை மட்டக்களப்பில் மிகப் பயங்கரமான நிகழ்வுகளே தொடர்ந்தன.

* பொது இடங்களில் டயர் போட்டுஎரிக்கப்பட்ட சடலங்கள்,
* பொது இடங்களில் தலை துண்டிக்கப்பட்ட முண்டங்கள்
* மட்டக்களப்பு வாவியில், கட்டப்பட்ட சாக்குகளில் மிதக்கும் சடலங்கள்.

இப்படியான அவலமான நிலைதான் நீடித்தது. இத்தகைய மர்மப்படுகொலைகளினால் மக்கள் பீதியடைந்தனர். இலக்கத்தகடுகள் இல்லாத வாகனங்களில் வரும் ஆயுதப் படையினரின் பயங்கரவாதமே இது என்பது யாவருக்கும் தெரியும். எனினும், இம் மர்மப் படுகொலைகளுக்கு, கறுப்பு நாகம், கறுப்புப் பூனை, பச்சைப்புலி, பிரா, தமிழீழ விடுதலைக் கழுகுகள் என்ற கறுப்பு அமைப்புக்கள் உரிமை கோரும் பிரசுரங்களும் இடையிடையே வெளியாகிக்கொள்ளுவது சகஜமாகி உள்ளது.



மட்டக்களப்பு நகர்ப்பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு இராணுவத்தினருடன் நிலைகொண்டுள்ள சமூக விரோதக் குழுக்களும் இராணுவத்துடன் ரோந்து புறப்பட்டு, தமிழ் மக்களை காட்டிக் கொடுக்கின்றனர். தமது பழிகளைத் தீர்த்துக்கொள்கின்றனர்.

தமது உயிர்களைப் பாதுகாத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துக் கொள்வதற்காக உடமைகளைக் கைவிட்டு அகதிகள் முகாமில் தஞ்சம் அடைந்திருந்த தமிழர்கள் கூட இராணுவ வெறியாட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளமுடியவில்லை.

*** பொது இடங்களில் டயர் போட்டு எரிக்கப்பட்ட சடலங்கள்,**

*** பொது இடங்களில் தலை துண்டிக்கப்பட்ட முண்டங்கள்,**

*** மட்டக்களப்பு வாவியில், கட்டப்பட்ட சாக்குகளில் மிதக்கும் சடலங்கள்.**

**இப்படியான அவலமான நிலைதான் நீடித்தது.**

கிழக்கு பல்கலைக் கழக முகாமில் 35 கிராமங்களைச் சேர்ந்த 52,000 அகதிகள் இருந்தனர். இராணுவம் திடீரென சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொண்டு 156 பேரை கைது செய்தது. மூவரிடம் கிரைனைட், ஏ. கே. 47, வாக்கி டோக்கி என்பன கொடுத்து வீடியோப் படம் எடுத்த பின்பு 156 பேரையும் விசாரணைக்கென அழைத்துச் சென்றது. கொண்டு செல்லப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பது இதுவரை புரியாத புதிராகவே இருக்கின்றது.

இதுபோன்று, அகதி முகாம்களில், சுற்றிவளைத்து தேடுவதும், கைது செய்வதும் பின், வானொலிகளிலும், தொலைக் காட்சிகளிலும், பத்திரிகை போன்ற பிரச்சார சாதனங்களிலும் புலிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பதும் வழமையான நிகழ்வாகவே நீள்கின்றன.

இராணுவம் கைதுசெய்து மீளாதாவர்களின் பட்டியல் தனியாகவும், குழுவாகவும் நீடித்துக்கொண்டிருக்கிறது.

காணாமல் போனவர்களில் அமெரிக்கத் துறைவியான வணபிதா வெபர்(70 வயது) என்பவர் கூட இடம் பெறுகிறார். வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பிற்கு சைக்கிளில் திரும்பும் வழியில் அவனுடன் வந்த இரு வாலிபர்களை செங்கல்லடி இராணுவம் தடுத்து வைத்து. இதனை கண்டித்த அவரும் தடுத்து வைக்கப்பட்டார். இறுதியில் மூவர் பற்றிய தகவல்களும் இல்லை.

மட்டக்களப்பில் 12. 06. 1991 இல் நடைபெற்ற கொக்கட்டிச்சோலை படுகொலை மிகப் பயங்கரமானது. இவ் இராணுவ வெறியாட்டத்தில் 172 பேர் படுகொலை செய்யப்பட்டனர். குழந்தைகள், பெண்கள், முதியோர் என்ற வேறுபாடின்றி பயங்கரவாதம் தமிழ் மக்கள்மேல் கட்டவிழ்த்துவிடப்பட்டது. இராணுவப் பயங்கரவாதத்திற்கு இது ஒரு இரத்த சாட்சி.

இராணுவம், மட்டக்களப்பு நகரை 24. 06. 90 அன்று தமது கட்டுப்பாட்டுன் கீழ் கொண்டவந்த பின்பு, 29. 06. 90 ல் முதலாவது சுற்றிவளைப்பு தேடுதலை ஆரம்பித்தது. வெபர் மைதானம், ஆசிரியர் கல்லூரி, பிள்ளையார் கோவில் ஆலயம், புனித மரியாள் ஆலயம் ஆகியவற்றில் ஆண்கள் கூடுமாறு அறிவிக்கப்பட்டது. 37 பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். எவரும் இதுவரை வீடு திரும்பவில்லை. அவர்களுக்கு நடந்தது என்ன? டயர் போட்டு எரிக்கப்பட்ட சடலங்களாவும், தலை துடிக்கப்பட்ட முண்டங்களாகவும் வீதிகளில் வீசஎறியப்பட்டார்களா? இதற்கான பதிலை சிறீலங்கா அரசுதான் சொல்ல வேண்டும்.

சிங்கள இளவெறியரசு, தனது இனஅழிப்பு நடவடிக்கைக்கு, வாய்ப்பான தளமாக தென்தமிழீழத்தை கருதுகின்றது. கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புக்கள், கடத்தல்கள், இன்னும் பிற மோசமான சித்திரவதைகளுக்கு மத்தியிலேயே, தென்தமிழீழம் மூச்சு விடுகின்றது.

இந்தக் கொடுமையான, சிங்கள இனவெறியரசின் ஆக்கிரமிப்புக் கரங்களில் இருந்து தென்தமிழீழத்தை எப்போது நாம் விடுவிப்போம்? ■

## உங்களுடன்...

எரிமலை இதழுக்கு, நீங்கள் தருகின்ற பெரும் ஆதரவும், அதனை தரமுயர்த்த நீங்கள் எடுத்துக்கொள்ளும் அக்கறையும் எம்மை ஆர்வமுடன் இயங்கத் தூண்டுகின்றன. ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும். கதைகள், கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள், கேலிச்சித்திரங்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

மாசி 15 - பங்குனி 15 க்கான "எரிமலை" இதழில் வெளிவந்த நவீன ஓவியம் பற்றிய கட்டுரை, "கலைமுகம்" என்ற பத்திரிகையில் இருந்து எடுக்கப்பட்டது.

- ஆசிரியர் குழு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடியல்புறாக்கள்

விடியலைத்
தேடும்
வெண்புறாக்கள்
இவர்கள்

கடந்த
பாதைகளில்
பதிந்த
சுவடுகள்
கறை
படிந்ததால்
புதிய
பாதையில்
கால் பதிக்க
புறப்பட்டு வந்த
வெண்புறாக்கள்
இவர்கள்

தாயின்
பாசத்தால்
தவழவேண்டிய
நேரத்தில்
தாயக மீட்புக்காய்
தன்னை
அர்ப்பணித்து
ஆயுதம் ஏந்தி
போர்க்களம்
புகுந்த
புரட்சிப் புறாக்கள்
இவர்கள்

கழுத்திலே
மரணம்
கட்டித் தொங்க
கயவனை அழிக்க
களம் புகும்
புறாக்கள்

மரணம் என்பது
இன்றோ நாளையோ
என்றவாறே
களம் சென்று
இவர்கள்
கடும் சமர்
புரிபவர்கள்.

வன்னிக்
காடுகளில்
வட்டமிடும்
புறாக்கள்
கொண்டைச்சி
கொக்காவில்
மணலாறு
மாங்குளத்தை
முகவரியே இல்லாமல்
மூடிமறைத்தவர்கள்.

இளைய புலிகளே
உங்களுக்கு
இந்தத் துணிவு
எங்கிருந்து வந்தது
காலம் என்பது
கட்டளையிட்டதா
கடமையுணர்வு
தட்டிக் கேட்டதா.

விடியல் என்பது
விரைவில் கிடைக்கும்
தமிழீழம் என்பது - நம்
தாயகமாகும்.

*- வன்னியன் -*
(பாரிஸ்)

# மகனே

கருமுகில்கள் வேதனையுடன்
முனங்குகின்றன....
விண்மீன்கள் மௌனமாய்
அழுகின்றன....
நிலவை தொலைத்துவிட்ட
இரவு கூட அழுகின்றது...
காணாமல் போன
கௌதம புத்தனைத்தேடி
அரச மரம் அழுகின்றது....
கன்றைத் தொலைத்துவிட்ட
பசு கதறுகின்றது....
அங்கு என்ன கூட்டம்... நிறமில்லாத
ஒப்பாரியில் வேதனைகள்
வெடிக்கின்றன...
ஒரு தாயின் ஓலம் வானெங்கும்
வியாபிக்கின்றது....
மகனே... கொடியவர்கள்
உனை விலங்கிட்டு அழைத்துச்
சென்றார்கள்... இந்தக்கணம்
ஈமக்கிரிகைகள் அற்றே
உன்னை எரித்திருப்பார்கள்.. மக.. னே..
சாம்பல்கள் பறந்து
உயிரில் கலக்கும் போது
சவ அடக்கம் எதற்குஎன
நீதானே கூறினாய்.

பல சிக்கல்களுக்கு மத்தியில், மலையகத்திலிருந்து ஒரு பெண் கவிஞரினால் வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பிலிருந்து (பெயர் குறிப்பிடப்படவில்லை)

www.tamilarangam.net

## மாவீரர்

தமிழீழத் தெருக்களில்
எரியும் விடி வெள்ளிகள்
குறிக்கோள் என்ற
மையக் கோளிலிருந்து
பிரகாசிக்கப்படுபவர்கள் !

- சாந்தன் -
ஜேர்மனி

## நானும் என் பேனாவும்

போர்த்திய போர்வையை
விலத்தியே எழுந்தேன்.
வெளியே வெண்பனித் தூறல்.

காலையில் எழுந்து
கடன் முடித்து
'விறுவிறு' என்று
விரைந்தெழுந்தோட
'வேலை'யுண்டா எனக்கு?

அதனால். . .

கதிரையில் குந்தி
கடுதாசிக் கட்டெடுத்து
நெளிந்து சுருண்ட
என் தாடியைத் தடவி
தத்துவம் எழுத
தயாரானேன் நான்.

'கிழி கிழி' என
கிழித்து முடிக்க
ஆர்வமாய்
அவசரமாய்
எழுத்தில் ஒரு வேகம்.

எழுதிய வார்த்தையை
முடித்திட்டு நிமிர
'நிறுத்து'
என்றது ஒரு குரல்.

'யாரது'
எனக் கேட்டு
சுற்றும் முற்றும்
விழிகளால் அளந்தேன்

கண்களில் பட்டவர்
எவருமேயில்லை
சிரிப்பொலி மட்டும்
அருகிலே கேட்டது.

'நிறுத்தச் சொன்னது நான்தான்'
என்றது என் பேனா
'ஏன் சொன்னாய் நிறுத்த'
பொங்கிய கோபம்
பொசுங்கிட முன்பே
கூவியே கேட்டேன்.

'உம் தேச மக்களின்
விடுதலைப் போரை
வளர்த்திட எழுதும்'
நிதானமாய்ச் சொன்னது பேனா.

'எதை எழுதல்
என்பது என் தெரிவு'
கூறிய என்னை
மறித்து
தொடர்ந்தது பேனா.

'மலையினைத் தகர்க்கும்
திண்ணிய நெஞ்சம்
கொண்டவர் உம்மக்கள்
அவர்களை எழுதும்

மடிந்திட்ட மக்களின்
மரணத்தை வைத்து
வாழ்பவர் நீர்
என்பதை நினையும்'

உண்மைத் தீ
நெஞ்சிலே சுட்டெரிக்க
எழுதிய தாளை
கிடப்பிலே போட்டேன்.

புதியதோர் தாளில்
அழுத்தமாய் எழுத
உயிர்த் துடிப்பாய்
வந்தது வார்த்தை.

- திலீபன் -
(லண்டன்)

## ...க்கு ... என்ன செய்தோம்?

...த்தில் எதிரி
...ன - நாம்
...வீடியோ வாங்கி
...கழிக்கின்றோமே
...ம் என்ன செய்தோம்

... என்ன வென்று
... இருக்காமல்
...ம் பெற்றிடுவோம்
...க் காத்திடுவோம்

...வரவேற்கும் பாரதம் என்றோம்
...மவர்க்கு நடப்பதென்ன
...மட்டும் இனி நிரந்தரமோ
...கு எங்கும் தலையிடிதான்
...ம் ஒன்றே அதற்கு வழி


...டு அமைக்க நாம் என்ன செய்தோம்
...ள் அங்கு படும்பாடு என்பார்
...லும் வெய்யிலிலும் பாவங்கள் பொடியள் என்பார்
...ப்பு என்ன வென்றால் பறந்திடுவார்
...வேலை யென்று.

- விவி -
(ஜேர்மனி)

www.tamilarangam.net

# யூகோஸ்லாவியா: புதிய நாடுகள் பிரசவம்

திலகர்




யூகோசிலாவியா என்ற ஒரு நாட்டிலிருந்து பல நாடுகள் பரிணமித்துவிட்டன. ஆறு சமஷ்டிக் குடியரசுகளைக் கொண்டிருந்த அந்நாட்டில், நான்கு குடியரசுகள் தனித்தனி நாடுகளாக தம்மைப் பிரகடனப்படுத்திவிட்டன. சேபியத் தேசிய இனமே யூகோசிலாவியாவில் பெரும் எண்ணிக்கையான மக்களாயினும், இரு குடியரசுகளைத் தவிர ஏனைய குடியரசுகளில் வேறு தேசிய இனங்கள் பெரும்பான்மையாக இருந்துவந்துள்ளன. ஒவ்வொரு குடியரசும், தனிப்பட்ட ஒரே தேசிய இனத்தைக் கொண்டிராது பல்வேறு தேசிய இனங்களைச் சிறுபான்மை மக்களாகக் கொண்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு யூகோசிலாவியக் குடியரசுகள் தனிநாடுகளாகப் பிரியும்போது, அக்குடியரசுகள் சிலவற்றில் சிறுபான்மையினராக இருந்த சேபியர்கள், இவ்வாறு தனிநாடுகளாகப் பிரிவதை எதிர்த்தார்கள். யூகோசிலாவிய சமஷ்டி ஆட்சியை தொடர்ந்து நிலைநிறுத்த விரும்பினர். அதற்காகப் போர் தொடுக்கவும் தலைப்பட்டனர். சேபியா, மொன்ரிநிகரோ ஆகிய குடியரசுகளைவிட ஏனைய நான்கு குடியரசுகளிலும் சேபியர் பல்வேறு விகிதாசாரங்களில் சிறுபான்மையினராக இருந்தார்கள். சேபியப் போர் வீரர்களையும், அதிகாரிகளையும் பெரும்பான்மையாகக் கொண்ட யூகோசிலாவியாவின் சமஷ்டி இராணுவத்தின் துணையுடன், குடியரசுகளில் சிறுபான்மையினராக இருந்த சேபியர்கள் தம்மை ஒழுங்கமைவற்ற (IRREGULAR) இராணுவமாக்கி புதிய நாடுகளுக்கு எதிராகப் போர் தொடுத்தனர். ஸ்லோவேனியா என்ற புதிய நாட்டில் சேபியர்கள் குறைந்த எண்ணிக்கையினர் ஆகையினால், ஸ்லோவேனியா பாரிய போர் நடவடிக்கையின்றி சுதந்திரம் அடைந்துவிட்டது. குரோஷியக் குடியரசில் மூன்றில் ஒரு பங்கினர் சேபியர்கள் ஆனபடியால், சேபிய ஒழுங்கமைவற்ற படையும், யூகோசிலாவிய சமஷ்டி இராணுவமும் குரோஷிய சுதந்திரத்தை மறுத்துப் போரிட்டு வருகின்றன. சுதந்திரக் குரோஷியாவில் நடைபெற்ற போர் தற்போது ஓய்வு நிலையை அடைந்துள்ளது. பதினைந்தாவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்தம் தொடர்ந்து தாக்குப்பிடிக்கிறது.



குரோஷிய ஜனாதிபதி ருஜ்மன்

ஐரோப்பிய சமூக நாடுகளும், ஐ. நா சபையும் தலையிட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


அங்கு பேச்சுவார்த்தை மூலமான சமாதானத் தீர்வை ஏற்படுத்த முயன்று வருகின்றன. 14000 ஐ. நா சபையின் நீலத் தொப்பிகள் (BLUE HELMETS) என்று அழைக்கப்படும் சமாதானப் படையினர் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் குரோஷியா செல்லவுள்ளனர். அங்கு யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பது அவர்களது முக்கிய கடமையாக இருக்கும். அதேவேளை குரோஷியாவிலிருந்து யூகோஸ்லாவியா சமஷ்டி இராணுவம் வெளியேற வேண்டும் என்பதும், சேபிய ஒழுங்கமைவற்ற படைகளின் ஆயுதங்கள் நீலத் தொப்பிகளினால் களையப்பட வேண்டும் என்பதுவும் ஐ. நா சபையின் தீர்மானமாக உள்ளது. ஐ. நா சபையின் பிரதிநிதியாக செயற்பட்டுவரும் முன்னாள் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் சைரஸ் வான்ஸ் என்பவர் இவ்வொழுங்குகளை மேற்பார்வை பார்த்து வருகின்றார். சிதறுண்டு போகும் யூகோஸ்லாவியாவில் சமாதான ரீதியாக தேசிய மாற்றங்களை நிலைநிறுத்துவதே அவரது குறிக்கோளாக உள்ளது. ஐ. நா சபையின் பிரதிநிதியாகச் சென்றுள்ள சைரஸ் வான்ஸ் அமெரிக்க முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மட்டுமல்ல, "நடுநிலையான" சமாதான அமைப்பாக உலக அரங்கில் செயற்பட்டு வரும் காட்டர் பவுன்டேஷனில் ஒரு முக்கிய செயல்பாட்டாளராகவும் இருக்கிறார். காட்டர் முன்னாள் அமெரிக்க ஜனாபதி என்பதும் அனைவரும் அறிந்த விடயம். எனவே ஐ. நா சபை, ஐக்கிய அமெரிக்கா, "நடுநிலையான" காட்டர் பவுன்டேஷன் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்புகளையும் நாம் இங்கு கவனித்தல் வேண்டும். சமஷ்டிப் படைகளின் வெளியேற்றம், சேபிய ஒழுங்கமைவற்ற சமஷ்டிப் படையினரின் ஆயுதக் களைவு ஆகியவற்றின் பின்னரே ஆயுத ரீதியாக முரண்படும் பகுதியினரிடையே பேச்சுவார்த்தை இடம் பெறும். அதாவது ஐ. நா சபையின் பிரதிநிதியான சைரஸ் வான்ஸை மத்தியஸ்தராக வைத்து, யூகோஸ்லாவியக் குடியரசு, சேபிய தேசிய இனத்தினர், குரோஷிய தனியரசு ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கிடையில் பேச்சுவார்த்தை இடம்பெறும். குரோஷியாவை ஏற்கனவே ஐரோப்பிய சமூக நாடுகளும், உலகின் ஏனைய பல நாடுகளும் அங்கீகரித்துவிட்டன. ஸ்லோவேனியா, குரோஷியா என்பவை அண்மையில் பிரான்ஸில் அல்பேர்வில்லில் நடைபெற்ற பனிக்கால ஒலிம்பிக்கிலும் பங்குபற்றின. ஸ்பெயினில் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டிகளிலும் அவை பங்கு பற்றும். ஸ்லோவேனியா, குரோஷியா ஆகியவற்றின் சுயநிர்ணய உரிமையை, தனிநாடாகப் பிரியும் உரிமையை அங்கீரித்து ஐரோப்பிய சமூகமும், உலகசமூகமும் செயற்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. யுத்தத்தை நிறுத்தி, சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு சுதந்திர நாடுகளிற்கான உலக அங்கீகாரம் என்ற ஆயுதம் இங்கு பயன்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. ஒரு தேசிய இனத்தின் சட்டரீதியான அபிலாசையான தனிநாட்டுச் சுதந்திரம் உலக ரீதியில் அங்கீகரிக்கப்படும் போது, நீதியற்ற முறையில் சுதந்திரத்தைப் பெறவிடாது அடக்கும் ஒடுக்குமுறையாளனின் பலம் குன்றி விடுகிறது. அடக்குமுறை அகலப் போரும் நின்றுவிடுகிறது. அதேவேளை ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுதந்திரப் பிரகடனம் உலகளாவிய அளவில் அங்கீகரிக்கப்படும் போது அப்புதிய நாடு தார்மீக பலம் பெறுகிறது.



அதேவேளை தனது புதிய நாட்டைப் பாதுகாப்பதற்கு சட்டரீதியான முறையில் ஆயுதங்களை வாங்கி தன்னைப் பலப்படுத்தவும் அதனால் முடிகின்றது. இந்நிலையில் ஒடுக்குமுறையாளன் பின்வாங்கும் நிலை ஏற்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குரோஷியாவின் 1/3 பகுதிகளை போர் நடவடிக்கைகள் மூலம் சேபிய ஒழுங்கமைவற்ற இராணுவமும், யூகோஸ்லாவிய சமஷ்டிப் படைகளும் கைப்பற்றி வைத்துள்ளன. சமாதானப் பேச்சுவார்த்தையில் சேபிய மக்கள் வாழும் பகுதிகள், சேபிய குடியரசோடு



சேபியத் தலைவர் மிலோசவிக்

இணைக்கப்படல் வேண்டும் என்பது சேபியரின் கோரிக்கையாக உள்ளது. குரோஷி



யாவில் சேபியர் வாழும் பகுதிகள் துண்டாடப்படுமா என்பது தெரியவில்லை. பெரும்பாலும் குரோஷியாவின் பிராந்திய ஒருமைப்பாட்டை நிலைநிறுத்துதலையே ஐ. நா சபையும், ஐரோப்பிய நாடுகளும் நோக்காகக் கொண்டு செயல்ப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. குரோஷியாவினுள் சேபியப் பகுதிகள் சுய ஆட்சிப் பகுதிகளாகச் செய்ப்படுதல் அல்லது அப்பகுதிகள் பிரிக்கப்பட்டு சேபியக் குடியரசோடு இணைக்கப்படுதல் என்பவற்றில் ஒன்றைத் தீர்மானிப்பது பேச்சுவார்த்தையின் மிகச் சிக்கலான விடயமாக இருக்கும். காரணம் சேபியர் குரோஷியாவின் கீழ் சிறுபான்மையினராக வாழ ஒருபோதும் விரும்பமாட்டார்கள். அதேவேளை குரோஷியா தனது நிலப்பகுதிகளில் சிலவற்றை பிரித்துக் கொள்ளவும் விரும்பாது. உலக சமூகத்தின் பலவந்தத்தின் அடிப்படையில் சேபியர்கள் குரோஷியாவினுள் சிறுபான்மையினராக இருக்க சம்மதிப்பார்களா அல்லது சேபியப் பகுதிகள் சேபியக் குடியரசுடன் இணைக்கப்படுமா என்பது இனிவரும் சில மாதங்களில் தெரிந்துவிடும்.

தமிழீழத் தேசியப் பிரச்சனையோடு, இச் சர்வதேசத் தலையீட்டை ஒப்பிடும் போது நாம் 4 விடயங்களை அவதானிக்கலாம்.

ஒன்று குரோஷியத் தேசிய இனத்தின் பிரிந்து போகும் உரிமையை உள்ளடக்கிய தேசிய நிர்ணய உரிமை சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது ஒரு தேசிய இனத்தின் சுதந்திரப் பிரகடனத்தை அங்கீகரிக்க மறுத்துக் கொண்டிருப்பது தொடர்ச்சியான போருக்கும், நிலைமையை மேலும் மோசமாக்குவதற்கும் , சகல தரப்பினரும் மிருக நிலைக்குத் தள்ளப்படுவதற்கும் வழிவகுக்கும் என்பதும், அங்கீகரிப்பதன் மூலம் போரை நிறுத்தி அமைதியையும் சுபீட்சத்தையும் கொண்டுவரலாம் என்பதும் நடைமுறையில் உணரப்பட்டுள்ளது. அப்புதிய சுதந்திர நாட்டில் பிராந்திய ஒருமைப்பாடு பேணப்படல் வேண்டும் என்பது அங்கீகரிகப்பட்டுள்ளது. பலாத்தாகாரமாக அன்றி சமாதான முறை மூலமே தற்போதைய எல்லைகள் மாற்றப்படலாம் என்பது ஐ. நா சபையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சுதந்திரப் பிரகடனம் செய்த புதிய நாடுகளை அங்கீகரிக்க மனித உரிமை மீறல்களை முன்நிபந்தனைகளாக உலக சமூகம் விதித்தது. ஆயினும் குரோஷிய விடயத்தில் இரு தரப்பினரும் மிக மோசமான, மிலேச்சத்தனமான மனித உரிமை மீறல்களையும், பயங்கரப் படுகொலைகளையும் செய்தனர். அவற்றைக் கண்டுகொள்ளாத மாதிரி உலக சமூகம் தனது அங்கீகாரத்தை வழங்கி தனது இரட்டை வேடத்தை அம்பலப் படுத்தி உள்ளது.

ஒரு குடியரசினுள் பல்வேறு தேசிய இனங்கள் இருந்தபோதிலும், அவற்றில் சில சிறுபான்மைத் தேசிய இனங்கள் சுதந்திர நாடாக பிரிந்துபோதலை ஆயுத ரீதியில் எதிர்த்த போதிலும் பெரும்பான்மை மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு மதிப்பளித்து உலக சமூகம் சுதந்திரநாடுகளை அங்கீகரித்ததும் குறிப்பிடத்தக்கது. பெரும்பான்மை விருப்புக்களை சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் குடியரசுகள் வெளிப்ப

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டுத்தியதும் இங்கு கவனிக்கத் தக்கது.

ஸ்லோவேனியா, குரோஷியா ஆகிய இரு குடியரசுகளைத் தவிர வேறு இரு குடியரசுகளும் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளன. அவையும் சர்வஜன வாக்கெடுப்புக்களை நடத்தி தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டி உள்ளன. மொஸ்னியா-கெஸிகோவினா, மசிடோனியா ஆகிய இரு யூகோஸ்லாவியக் குடியரசுகளே அவை ஆகும். ஆக சேபியா, மொன்ரிநிகரோ ஆகிய குடியரசுகளே யூகோஸ்லாவியாவின் சமஷ்டி ஆட்சியில் எஞ்சி நிற்கின்றன. இவை இரண்டும் இணைந்தும் குரோஷியாவிலுள்ள சேபியப் பகுதிகளை இணைத்தும் பரந்த சேபியத் தனி நாட்டை அமைத்துக் கொள்ளலாம். அதுவே யூகோஸ்லாவியா என்ற நாடாகத் தொடரலாம்.

பொஸ்னியா-கெஸிகோனாவில் முஸ்லீம்கள் 44 வீதமும், குரோஷியர்கள் 17 வீதமும் இருக்க மிகுதியானோர் சேபியர்களாக உள்ளனர். எனவே முஸ்லீம்களும், குரோஷியர்களும் இணைந்து சர்வஜன வாக்கெடுப்பில் தனிநாடாக பிரிவதற்காக வாக்களிக்கும் போது, சேபியர்கள் சர்வஜன வாக்கெடுப்பை பகிஷ்கரித்து தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இங்கும் உள்நாட்டுப் போர் எழாதவாறு தடுப்பதற்காக 3 தேசிய இனங்களையும் கன்ரன்களாக ஒன்றிணைத்து ஒரு நாடொன்றை உருவாக்குவதற்காக சைரஸ் வான்ஸ் மூன்று பேருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளார். மூன்று மக்களும் எங்கும் கலந்து வாழ்வதால் தனிப்பகுதிகளாக -கன்ரன்களாக பிரிப்பதில் சிக்கல்கள் உள்ளன. ஐரோப்பிய சமூக நாடுகள் பொஸ்னியா-கெஸிகோவினாவை அண்மையில் அங்கீகரித்துள்ளன. ஐரோப்பிய சமூகத்தின் நிபந்தனையான சர்வஜன வாக்கெடுப்பை இக்குட்டிய ரசு நிறைவேற்றியுள்ளது. தகுதி பெற்ற வாக்காளர்களில் 56% ஆனோரே வாக்களித்தனர் என்பதும், அவர்களில் 99% ஆனோர் தனிநாட்டுச் சுதந்திரத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தனிநாட்டு உருவாக்கத்திற்காக உலக அங்கீகாரங்கள் புதிய நாடுகளுக்கு கிடைப்பதை உணர்ந்த சேபிய மக்களும், அதன் தலைவர் ஸ்லோபடன் மிலோசபிக்கும் -தனிநாடுகளின் உருவாக்கத்தை தாம் தடுப்பதில் பிரயோசனமில்லை என உணர்ந்து அவ்வாறு செயல்பட்டு வருகின்றனர்.

மசிடோனியாவைப் பொறுத்தவரை, அதன் அயலில் உள்ள ஐரோப்பிய சமூக நாடுகளில் ஒன்றான கிரேக்கம் புதிய நாடாக உருவாவதற்கான அங்கீகாரத்தை தடுத்து வருகின்



## தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப்பார்க்க முடியாது.

"சண்டே ரைம்ஸ்" ஆங்கிலப் பத்திரிகைக்கு அமைச்சர் தொண்டமான் பேட்டி.

தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் பிரித்துப்பார்க்க முடியாது .

விடுதலைப் புலிகளைத் தோல்விகாணச் செய்வதென்பது வடக்கு கிழக்கில் உள்ள ஒவ்வொரு தமிழ் மகனையும் தோல்விகாணச் செய்வதற்கு ஒப்பாகும்.

விடுதலைப் புலிகளை அழிப்பதென்பது, தமிழ் மக்களை அழிப்பேன் என்று கூறுவதற்குச் சமனாகும்.

தமிழ் மக்கள் இருக்கும் வரைக்கும் இலட்சிய உறுதிகொண்ட விடுதலைப் புலிகளும் இருப்பார்கள்.

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துபவர்களாகவும், அவர்களது இலட்சியத்துக்காக தொடர்ந்து போராடுபவர்களாகவும் இருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகள் இலட்சியத்தில் உறுதியுடையவர்கள்; அவர்கள் சுதந்திர வீரர்கள்.

ஏனைய தமிழ்க் குழுக்கள் களைப்பினாலோ அல்லது பிற காரணங்களினாலோ போராட்டத்தைக் கைவிட்டு, தங்கள் இலக்குகளை காற்றில் பறக்கவிட்டுள்ளனர்.

www.tamilarangam.net

றது. மகா அலக்ஸாந்திரின் பிறப்பிடமான மசிடோனியா கிரேக்கத்திற்கு சொந்தம் எனவும் -மசிடோனியா புதிய நாடே அல்ல எனவும் கூறி வருகின்றது. மசிடோனியாவில், கிரேக்கர் மாத்திரமல்ல, பல்கேரியர், துருக்கியர், யூதர், சேபியர் என பல்வேறு சமூகத்தவர்கள் வாழ்கின்றார்கள். இதற்கென பலம் பொருந்திய இராணுவமோ, ஆயுத உதவிகளோ, அயல் நாட்டு ஆதரவோ இல்லை. சேபியாவும், பல்கேரியாவும் மசிடோனியாவிற்கு உரிமை கோருகின்றன. அதே வேளை பல்கேரியா மட்டுமே மசிடோனியாவை அங்கீகரித்துள்ளது. பலவீனமான இப்புதிய நாடு உலக அங்கீகாரத்தைப் பெற ஐரோப்பிய நாடுகளையே நம்புகிறது. ஐரோப்பா என்ற கண்டத்தினுள், திறந்த எல்லைகளைக் கொண்ட ஒரு நாடாக தன்னை உருவாக்கிக் கொள்ள முயல்கின்றது. தனது நிலப்பகுதிகளையும், எல்லைகளையும் பாதுகாப்பதற்கு பல மற்ற இப்புதியநாடு -விரோதமான அயல்நாடுகளைக் கொண்ட இப்புதிய தேசம், ஐரோப்பா என்ற பெரும் சமூகத்தினுள் பாதுகாப்பைத் தேட முயல்கின்றது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தினுள், இறைமையுள்ள தனிநாடாகவும், அதேவேளை கூட்டமைப்பொன்றில் ஒன்றிணைந்ததாகவும் தமிழீழம் அமைவது குறித்தும், நாம் மசிடோனியா விடயத்தில் பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். ■

# ராஜீவ் கொலை

## - சுட்டு முயற்சியா?

சடையார்



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான விசாரணைகள் சிக்கல்களை அவிழ்ப்பதற்குப் பதிலாக பெரும் சூனியத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. புலனாய்வுத்துறை ஒருதலைப் பட்சமாக தனது விசாரணைகளை நடத்திவருவதாக புகார்கள் எழுந்துள்ள அதேநிலையில், அதை உறுதிப்படுத்துவதான நிகழ்ச்சிகளும் வெளிவரத் தொடங்கியுள்ளன. ராஜீவ் கொலையில் குற்றம் சுமத்தப்பட்டு, தடாச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ள, முருகன், பேரறிவாளன், பத்மா, நளினி, பாக்கியநாதன் ஆகியோர் விசேட நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்ததையடுத்து, எந்தவகையில் வாக்குமூலங்கள் பெறப்பட்டன என்றும், வழக்கு எந்த வகையில் சோடிக்கப்படுகின்றன என்றும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. விடுதலைப் புலிகளைக் குறிவைத்து ஆரம்பிக்கப்பட்ட புலனாய்வு வேட்டைகள், எதிர்பாராத திருப்பங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளை நோக்கி குற்றப்பத்திரம் வாசித்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியை நோக்கி சுட்டுவிரல் நீட்டப்பட்டுள்ளதுதான் ஆச்சரியம். பாக்கியநாதன் தாக்கல் செய்த மனுவில், வாழம்பாடி ராமமூர்த்திக்கும், சிவராசனுக்கும், புகைப்படக்காரர் கரிபாபுவுக்கும் தொடர்பு இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சிவராசனும், வாழப்பாடியாரும் இணைந்து புகைப்படம் எடுத்துக்கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் புதிய தகவல் விசாரணையாளர்களை அதிர்ச்சிக்கும் குழப்பத்திற்கும் உள்ளாக்கியுள்ளது.

### உண்மை! உண்மையைத்தவிர வேறொன்றுமில்லை!



அசாமில் பன்னிரண்டு ஆண்டுகளாக பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளது. அங்கெல்லாம் ஆட்சியாளர்களால் பயங்கரவாதத்தை ஒழிக்க முடியவில்லை. ஆனால் ஜெயலலிதா பதவியேற்ற சில நாட்களிலேயே புலிகளை ஒடுக்கிவிட்டார்.

நிதியமைச்சர் நெடுஞ்செழியன்
ஜெயலலிதாவின் 44வது பிறந்தநாள் விழாவில்

சேலத்திலிருந்து , விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்திற்கு சக்திவாய்ந்த 'வயலஸ்' மூலம் பேசும்போது ஒட்டுக்கேட்டதில், அதிர்ச்சிதரும் விடயங்கள் வெளிவந்துள்ளன. விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவொன்று தமிழ் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளது. அவர்கள் என்னைக் கொல்வதற்காகவும், செங்கல்பட்டுச் சிறையை உடைத்து சிறைவைக்கப்பட்டிருக்கும் புலிகளை மீட்பதற்குமே வந்துள்ளனர்.

முதலமைச்சர் ஜெயலலிதா.
தமிழ்நாடு சட்டமன்றத்தில்

www.tamilarangam.net



தமிழ் நாடு காங்கிரஸ் கட்சிக்கும், ராஜீவ் கொலைக்கும் இடையே நேரடியான அல்லது மறைமுகமான தொடர்பு இருந்திருக்கின்றது என்ற சந்தேகம் எழுந்துள்ள அதேநிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த குமுதவல்லி, ராஜிவின் நிகழ்ச்சி பாதுகாப்பு ஏற்பாட்டில் குறைபாடு உண்டா என விசாரணை செய்துவரும் வர்மா கமிஷன் முன் அளித்த வாக்குமூலம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. திருபெரும்பத்தூர் காங்கிரஸ் எம். எல். ஏ லதா பிரியகுமாரின் காரிலேயே தனு, சிவராசன் ஆகியோர் வந்திறங்கியதாகவும், அதனை தான் கண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். குமுதவல்லியின் சாட்சியத்தை, தனது விசாரணைக் கமிஷனின் விசாரணை வரம்பிற்கு அப்பாற்பட்டதென வர்மா நிராகரித்த போதும், குமுதவல்லியின் சாட்சியம், ராஜிவின் கொலையில் உள்ள சதிபற்றி விசாரணை செய்துவரும் ஜெயின் கமிஷனுக்கு பெருதும் உதவியாக அமையும். இந்தக் கொலையின் பின்னணியில் காங்கிரஸ் முக்கியஸ்தரும், லதா பிரியகுமாரின் தாயாருமான மரகதம் சந்திர சேகரும் இருந்துள்ளார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குற்றம் சாட்டப்பட்டுள்ள காங்கிரஸ் பிரமுகர்கள், விசாரணைகளுக்கு சமூகமளிக்காமல் அலட்சியப்படுத்துவது, அவர்கள் மீதான சந்தேகத்தை மேலும் வலுவாக்கவே உதவியிருக்கின்றது. வர்மா கமிஷன் விடுத்த அழைப்பை, மரகதம் சந்திரசேகரும், வாழம்பாடி ராமமூர்த்தியும் தொடர்ந்து அலட்சியப்படுத்துவதாக நீதிபதி வர்மா கண்டித்துள்ளார். மரகதம் சந்திரசேகரை வர்மா கமிஷம் மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்கு அழைக்கக்கூடாது என்றும், அவர் ஆஜராகதால் ஏற்படப்போகும் பின்விளைவுகளுக்கு அவரே பொறுப்பு எனவும் நீதிபதி வர்மா கடுமையாக உத்தரவிட்டுள்ளார். இதேபோல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடியும் பலமுறை அழைக்கப்பட்டும் வரவில்லை எனவும், மேற்கொண்டு வராமல் இருப்பாரேயானால் இதே நிலை அவருக்கும் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்மா கமிஷன் முன் சாட்சியமளித்த, லதா பிரியகுமார் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளித்துள்ளார் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. ராஜீவ் கொலைகளோடு தொடர்புடையவர் என்று கூறதப்படும் காங்கிரஸ் எம். எல். ஏ லதா பிரியகுமார் வர்மா கமிஷன்முன் முரண்பாடான சாட்சியங்களை அளித்துள்ளார் என 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு எழுதியுள்ளது.

வாழப்பாடி ராமமூர்த்தி, ஜெயலலிதா போன்ற அரசியல் வாதிகளின் விருப்பிற்கும், தேவைக்கும் ஏற்றவகையில் புலனாய்வுத்துறை ஏவல் புரிந்ததாகவும், பெரும் சித்திரவதைகளுக்கு மத்தியில் வாக்குமூலங்கள் வடிவமைக்கப்பட்டதாகவும் வெளிவரும் செய்திகள் ஒருபுறமும், தொடரும் விசாரணைகள் வாழப்பாடி ராமமூர்த்திபோன்ற அரசியல்வாதிகளை மாட்டியிருப்பது ஒருபுறமுமாக குழப்பமான, வியப்பான சம்பவங்கள் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன.

ராஜிவின் கொலையில் சம்பந்தப்பட்டோர் மீதான குற்றப்பத்திரிகை சித்திரை மாதத்திற்குள், இதுதொடர்பாக இயங்கிவரும் விசேஷ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என விசேஷ புலனாய்வுக்குழுவின் தலைவர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார். குற்றப்பத்திரிகையில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் நீளுமா அல்லது சுருங்குமா, இன்றேல் மறைக்கப்படுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். முன்னாள் இந்தியப் பிரதமரின் கொலையில் உள்நாட்டுச் சதிவலைப்பின்னல் ஒன்று இருந்திருக்கின்றது என்பதும், அதில் காங்கிரஸ் கட்சிப்பிரமுகர்களும் இருந்திருக்கின்றனர் என்பதும் புலனாகின்றது. இத்தகைய குற்றச்சாட்டுக்கள் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே எழுந்துள்ளதுதான் இவற்றை மறைக்கமுடியாமல் ஏற்றுக்கொள்ளத் தூண்டுகின்றது. ■

## எழுத்துரிமை?

பிரபாகரனுக்கும் மாத்தையாவிற்கும் இடையே மோதல் ஏற்பட்டு, பிரபாகரனை மாத்தையா சுட்டுக் கொன்றுவிட்டார் என்று இந்தியாவில் உள்ள பார்ப்பனப் பத்திரிகைகளும், தொலைக்காட்சியும், வானொலியும் கட்டுப்பாடாகப் பிரச்சாரம் செய்தன; 'தினமலர்' என்னும் பார்ப்பன ஏடு, பிரபாகரன் இறுதி ஊர்வலம் புறப்படும் நேரம், வழிப்பாதைகளை எல்லாம் கூட வெளியிட்டுக் குதூகலித்தது. அதே ஏடுகள்தான் இப்போது பிரபாகரன் சரணடைய வேண்டும் என்ற செய்தியையும் வெட்கமில்லாமல் வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன.

விடுதலை
02. 03. 92

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# குறும்பார்வை

வளவன்

இந்திய அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது பலவித அழுத்தங்களைப் போட்டு வருகின்றது. அரசியல், இராணுவ அழுத்தங்களோடு, நீதித்துறை தொடர்பான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. அண்மையில், வங்கக் கடல்பகுதியில் இந்தியக் கடற்படையின் பலம் மேலும் அதிகரிக்கப்பட்டு, கண்காணிப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் சென்னை வந்து முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்த போது, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தமிழகத்தில் கட்டுப்படுத்தும் விடயத்தில் மத்திய அரசு, மாநில அரசுக்கு சகல உதவிகளையும், உடனுக்குடன் அளிக்கும் என உறுதிமொழி பகர்ந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. நீதித்துறை விடயத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனும் உளவுத்துறைத் தலைவர் பொட்டம்மானும் விசேட நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டதும், அவ்வுத்தரவு இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் விளம்பரமாக பிரசுரிக்கப்பட்டதும் நடந்துள்ளது. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனை, ராஜீவ் காந்தியின் கொலையோடு சம்பந்தப்படுத்தி, அக்கொலையைச் செய்ய உத்தரவிட்டதாக காட்டுவதன் மூலம் தலைவர் பிரபாகரனை கொலைக்குற்றவாளியாகவும், சர்வதேச பயங்கரவாதியாகவும் உலகிற்கு வெளிப்படுத்துவதே இந்திய அரசின் நோக்கம் எனத் தெளிவாகப் புரிகின்றது. தடா மற்றும் இந்திய குற்றவியல் சட்டங்களின் கீழ் அவர்கள் இருவர் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பயங்கரவாத, சீர்குலைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அவர்களின் குற்றப்பத்திரிகை தெரிவிக்கின்றது. வெடிமருந்து சட்டத்தின் கீழும் அவர்கள் குற்றம் சுமத்தப் பட்டுள்ளனர். தடாச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விசேட நீதிமன்றமே இவ்வாணைகளைப் பிறப்பித்துள்ளது.

தடாச் சட்டம் (TADA) மிகக் கொடூரமான, மனித உரிமைகளைத் துச்சமும் மதிக்காத, மனித நாகரிகம் வெட்கித் தலைகுனியக் கூடிய சட்டம். ஸ்ரீலங்காவின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) சகோதரன். ஸ்ரீலங்காவின் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், சட்டப் புத்தகத்தில் விழுந்த கறை என்று சர்வதேச நீதியாளர் ஆணைக்குழுவினால் வர்ணிக்கப்பட்டது. பயங்கரவாதச் சீர்குலைப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான சட்டம் என வர்ணிக்கப்பட்டும் இச்சட்டத்தின் மூலம் எவரையும், நினைத்தவாறு கைது செய்யலாம். காலவரையின்றி எவ்வளவு காலமும் ஒருவரைக் காவலில் வைத்திருக்கலாம். முதலில், விசேட நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்படும் ஒரு சந்தேகநபர், உச்ச நிதிமன்றத்திலேயே மேல் விண்ணப்பத்தை மேற்கொள்ள முடியும். ஜூரர்கள் இல்லாத வழக்கு விசாரணையும், பொலிஸ் காவலின் போது பலவந்தப்படுத்திப் பெறப்பட்ட வாக்குமூலங்கள், நீதிமன்றத்தில் செல்லுபடியாகும் தன்மையும், தடாச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவனவாகும். கட்டுப்படுத்தப்பட முடியாத உள்நாட்டுக் குழப்ப நிலைமையிலேயே இச்சட்டத்தைப் பிரயோகிக்கலாம் என்றிருந்த போதும், தமிழ் நாட்டில் இச்சட்டம் தனது கொடூர அட்டகாசத்தைப் புரிந்து வருகின்றது. தேசிய பாதுகாப்புச் சட்டம் போன்றவை மாத்திரமல்ல, பிரிட்டிஷ் காலத்தில் நடைமுறையில் இருந்த சட்டங்களும் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளன. கிளர்ச்சிக்குத் தூண்டுவதைத் தடுக்கும் பிரிட்டிஷ் காலச் சட்டங்கள், இந்திய



வே. பிரபாகரன்

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்திய காங்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





பொட்டம்மான்

ரஸில் இருந்த பாலகங்காதீர திலகர் போன்ற தீவிரவாத சுதந்திரப் போராட்டத் தலைவர்களுக்கு எதிராக அச்சட்டங்கள் பாய்ந்தன. தற்போது தமிழ் நாட்டில் சுதந்திரப் போராட்டம் நடைபெறுகின்றதா, நிலைமை அவ்வளவு கட்டுக்கடங்காமல் போய்விட்டதா என அரசியல் ஆய்வாளர்கள் கேள்விகள் எழுப்பி உள்ளனர். ஜெயலலிதாவின் எதிர்கட்சிகளுக்கு எதிரான பழிவாங்கு நடவடிக்கை என்றும், குறுகிய பார்வையிலான செயல் என்றும் ஒருசாரார் இவற்றை வர்ணிக்கின்றனர்.

இந்தியப் பாராளுமன்றத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டும் என வாதப் பிரதிவாதங்கள் எழுப்பப்பட்டுள்ளன. தமிழ்நாடு இந்திராகாங்கிரஸ், அ. தி. மு. க. நாடாளுமன்ற உறுப்பினர்களே தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பலமாக எழுப்பி உள்ளனர். இவ்விடயம் நாடாளுமன்ற கொள்கை வகுப்புக் குழுவால் ஆராயப்படுவதாக இந்திய உள்துறை அமைச்சர் சவான் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு எதிரான இந்நடவடிக்கைகள் ஏன் என்று ஒருவர் கேட்கலாம். இறந்த ராஜீவ் காந்தி மேலான அன்பினால் என்றோ, இந்திய நாட்டிற்கு ஏற்பட்ட அவமானம் என்றோ எவரும் தப்புக் கணக்குப் போட முடியாது. தமிழீழப் பிரச்சனை பிராந்திய மட்டத்தைவிட்டு, சர்வதேச பிரச்சனையாக மாறி தன்கையை விட்டு போகக் கூடாது என்பதே இந்தியாவின் அங்கலாய்ப்பாய் உள்ளது. பல்வேறு ஐரோப்பிய நாடுகளோ, பொதுநலவாய அமைப்போ, ஐ. நா. சபையோ, இப்பிரச்சனையில் தலையிட்டு, மத்தியஸ்தம் வகிக்கும் சூழ்நிலை



ஜெயலலிதா

உருவாகி வருகின்றது. இப்பிரச்சனை சர்வதேச மத்தியஸ்தத்தின் கீழ் வருமானால், கஷ்மீர் பிரச்சனையும் சர்வதேச மத்தியஸ்தத்திற்கு உட்படலாம் என்று இந்தியா அஞ்சுகின்றது. எனவே, விடுதலைப் புலிகள் அமைப்பை "சர்வதேச பயங்கரவாத அமைப்பாக" வலிந்து காட்டுவதன் மூலம், சர்வதேச மத்தியஸ்தத்தை முறியடித்து விடலாம் என்ற நப்பாசையுடன் இந்தியா செயல்படுகின்றது. இவ்வரசியல் நடவடிக்கையை, நீதித்துறை நடவடிக்கை என்ற போர்வையிலும், தமிழக அரசின் மூலமும் செய்வதிலேயே இந்தியாவின் ராஜதந்திரம் சிறப்பாகச் செயல்புரிகின்றது.

அதேவேளை, தமிழ்நாட்டில், விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு கிடுகிடுவெனப் பெருகிவருகின்றது. அண்மையில் விடுதலைக் குயில்கள் என்ற அமைப்பு நடத்த முற்பட்ட, தமிழர் ஒற்றுமை மாநாடு தடைசெய்யப்பட்டு, தமிழக அரசியல் தலைவர் பழ. நெடுமாறன், இன்னும் திலீபன் மன்ற தலைவர் தியாகு, விடுதலைக் குயில்கள் அமைப்பின் தலைவர் சுபவீரபாண்டியன் உட்பட நூற்றுக் கணக்கானோர் கைதாகினர்.

தமிழ் தேசிய பொதுவுடமைக் கட்சி -தஞ்சாவூரிலிருந்து சென்னை நோக்கி "தமிழீழ உரிமை முழக்கம்" என்ற கோஷத்துடன் நடத்தவிருந்த மாபெரும் ஊர்வலமும் தடை செய்யப்பட்டுள்ளது. காவிரி நீர்ப் பிரச்சனையில், மத்திய, மாநில அரசுகளின் கையாலாகாத்தனம், கர்நாடாக தமிழர்கள் தாக்கப்பட்டமை, விலைவாசி உயர்வு ஆகிய உள்நாட்டுப் பிரச்சனைகளும், தமிழீழ மக்களின் போராட்டத்திற்கு தமிழ்நாட்டில் மீண்டும் ஆதரவைப் பெருக்கிவருகின்றன. சுதந்திரமான ஒரு நாடே உலகத் தமிழ் மக்களுக்கு ஒரு சுபீட்சமான வாழ்க்கையை அளிக்கும் என்பது, எவராலும் தடைசெய்ய முடியாத உண்மையாக, உணர்ச்சியலையாக வளர்ந்து வருகின்றது. இவ்விடயத்தில், விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போராட்டம் உலகத் தமிழர்களுக்கு ஆதர்ஷமாக விளங்குவது தவிர்க்க முடியாதது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உதிக்கும் திசை நோக்கி ஒன்றாக பயணம்

வே.



விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையாவின் கிழக்கு மாகாணப் பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் பயணக் கட்டுரையிலிருந்து...



அந்தப் பெரியவரிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றோம். வழியில் ஒரு மரத்தடியில் சிலர் படுத்திருந்தார்கள். சில மூட்டை முடிச்சுக்களும் காணப்பட்டன. அவர்களை அணுகினோம். அங்கிருந்த பெண்மணியிடம் "ஏனம்மா ஏதாவது பள்ளிக்கூடத்திலோ, அல்லது யாரிடமாவது உதவிபெற்று கொட்டிலோ, குடிசையோ அமைத்து இருக்கலாம் தானே? இந்த மாதிரி ஏன் மரத்திற்குக் கீழ் படுத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "பள்ளிக்கூடங்கள் எல்லாம் நிறைந்துவிட்டன. எங்களுக்கு இனிமேல்தான் வாடியடிக்க வேண்டும். அதுக்கு வசதியில்லை. எங்களுடைய வீடு, வாசல் எல்லாம் இழந்து இப்படி அலைய வேண்டியிருக்கிறது" என்றார் அவர். ஏனம்மா உங்கள் வீடு எங்கேயிருக்கிறது என்று விசாரித்தேன். 'செங்கல்லடி' என்றார். தொடர்ந்து "இப்போது அது இருக்குமா என்பது சந்தேகமே." என்றார். "வீட்டிற்கு என்ன நடந்தது?" என்றேன். அப்போது அங்கே இருந்த பெரியவர் இடையே குறுக்கிட்டார்.

"இராணுவம் நகருக்குள் வரும் போது கூடவே வெற்று லொறிகளும் வரும்" என்றார். "வெற்று லொறிகளா, எதற்கு?" என்றேன். "ஸ்டிக்கரோடு வரும் இராணுவத்திற்கு சாமான் ஏற்றத்தான்" என்றார். "கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்கள்" என்றேன். "இராணுவம் வரும்போது கூட்டங் கூட்டமாகத்தான் வீடுகளுக்குள் வரும். ஒவ்வொரு இராணுவத்தினரும் தமது பெயரைக் கொண்ட ஸ்டிக்கர்களைக் கொண்டு வருவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள பொருள்களில் தனக்குத் தேவையான பொருள்களின் மீது தமது ஸ்டிக்கர்களை ஒட்டவேண்டியதுதான். அப்படி ஒட்டப்படும் பொருள்கள் மீது மற்றவர் உரிமை கொண்டாட முடியாது. ஸ்டிக்கர் ஒட்டி முடிந்ததும் லொறியை அழைப்பார்கள். லொறியில் வருபவர்கள் பொருள்களை ஏற்றிக்கொண்டு போவார்கள்" என்றார்.

"இது இராணுவத்தினரின் சொந்தத் தேவைக்குத்தான் போகிறது என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்றேன். அதற்கு அவர் "எனது நண்பர் ஒருவர் உயர் பதவியில் உள்ளார். அவருக்குச் சிங்களம் நன்றாகத் தெரியும். இவரது வீட்டிற்கு வந்த இராணுவத்தினரில் ஒருவன் இவரிடம் 'உமக்கு சிங்களம் பேசத் தெரியுமா?' என்று ஆங்கிலத்தில் கேட்டான். இவர் தெரியாது என்றார். 'அதைக் கேட்டதும் அவன் முகம் பிரகாசம் அடைந்தது. அவரது வீட்டிலிருந்த தொலைபேசியை எடுத்து எவருடனோ தொடர்பு கொள்ள முயற்சித்தான். -நீண்டநேர பிராயத்தனத்தின் பின் அவனுக்குத் தொடர்பு கிடைத்தது. பேசினான். அவன் தான் மட்டக்களப்புக்கு வந்து சேர்ந்தேன் -வீட்டுக்குத் தேவையான பொருள்கள் எல்லாம் சேகரித்து விட்டேன் - தங்கச்சியிடம் சொல்லுங்கள். அவள் கேட்ட தங்க நகைகள் இன்னும் சேகரிக்க முடியவில்லை, வெகுவிரைவில் அவற்றையும் சேகரித்து விடுவேன் என்றான். முந்தித்தான் சிங்களவன் மொக்கன் என்று சொன்னோம். ஆனால் அவன் ஒவ்வொன்றையும் திட்டமிட்டு நேர்த்தியாகச் செய்து முடிக்கிறான்" என்றார். "எதைக் கொண்டு இப்படிச் சொல்கிறீர்கள்" என்றேன். 1977 ஆம் ஆண்டுக் கலவரத்தில் ஆட்களைக் கொல்லுவதிலும், வீடு, வாசல் பொருள்களை எரிப்பதிலும் தாறுமாறாக நடந்து கொண்டான். இந்தத் தடவை தமிழரைக் கொல்லும் பொறுப்பை முஸ்லீம்கள் கையில் ஒப்படைத்து, அவர்கள்தான் உங்களைக் கொல்லுகிறார்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற தோற்றத்தை எமக்கு ஏற்படுத்துகிறான். அதேவேளை வீடுகளிலுள்ள பொருள்களை பத்திரமாக தமது வீடுகளுக்கு ஏற்றி அனுப்புகிறான். இந்தப் பொருட்களை ஒரு இராணுவச் சிப்பாயால் சேகரிக்க எத்தனை வருடம் பிடிக்கும்? தமிழரிடம் இருந்து எடுப்பதெல்லாம் உங்களுக்குத்தான் என்று சொன்னால் தமது வாழ்க்கைத் தரம் விரைவில் உயர்ந்துவிடும் என்ற நம்பிக்கையில் இராணுவத்தில் சேர முயற்சிப்பார்கள். ஏற்கனவே வீணாகச் சாகிறோம் என்ற மனநிலையில் இருக்கும் இராணுவத்தினரை சமாளிக்கவும் இந்த நடவடிக்கை உதவுகிறது" என்றார்.

'சரி, முஸ்லீம்கள் தொடர்பாக நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்"? என்றேன். "இளனி குடிப்பவன் குடிக்க கோம்பை துப்புபவன் நிலைதான் இவர்களது நிலை. ரி.வி, டெக், றேடியோ போல விலையுயர்ந்த பொருட்களை இராணுவத்தினர் எடுத்துக் கொண்டு போக எஞ்சியிருக்கும் ஜன்னல், கதவு, நிலை போன்றவற்றை எடுப்பதில்தான் இவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள்" என்றார்.

"சரி தமிழரைக் கொல்வதையும், பெண்களைக் கற்பழிப்பதையும் பற்றி என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன். "சிங்களவன் இவர்களைச் சரியாக ஏமாற்றிவிட்டான். யாருடைய ஏவுகளாலோ இவர்கள் தாறுமாறாக நடந்து கொள்கின்றனர். தமிழர்களைத்தானே கொல்கிறார்கள், தமிழ்ப் பெண்களைத்தானே கற்பழிக்கிறார்கள் என்று முஸ்லீம் சமூகம் தற்போது அசட்டையாக இருக்கலாம், நாளை இது இவர்களையே சூழும்" என்றார். "அப்படியென்றால்...?" என்றேன். "தமிழர்களைக் கொலைசெய்துவிட்டு தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துவிட்டு 'கொட்டியாவைத்தான் கொன்றோம்' என்றபோது மனிதாபிமானம், தர்மம் என்பவற்றை ஒதுக்கிவிட்டு இராணுவத்தினரின் தீரச்செயலைப் புகழ்ந்தார்கள். கொலைசெய்தும், கற்பழித்தும் பழக்கப்பட்ட இராணுவம், பின்னர் ஜே. வி. பி பிரச்சனையில் ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைக் கொன்றபோது, ரயர் போட்டுக் கொளுத்தியபோது, சிங்களவர்கள் தம் தவறை உணர்ந்து கொண்டார்கள். அதேபோலத்தான் இன்று அல்லாவைத் தொழாத தமிழர்களைக் கொல்வது பாவமில்லை என முஸ்லீம் மக்கள் நினைக்கலாம். ஆனால் தமிழ் மக்களைக் கொலைசெய்து பழக்கப்பட்ட, கற்பழித்துப் பழக்கப்பட்ட, முஸ்லீம் காடையர் நாளை தமது இனத்தில் இவ்வாறான செயல்களில் ஈடுபடும்போதுதான் தமது தவறை உணர்வார்கள். அப்போது அவர்களைக் காப்பாற்ற யாருமே இருக்கமாட்டார்கள்" என்றார். ■



உளறுக்கள்

விடுதலைப் புலிகளுக்கு உதவுவோம், தமிழகத்தில் எதையும் செய்வோம்; எங்களைத் தடுக்க ஜெயலலிதா யார்?

டாக்டர் ராமதாஸ் (பாட்டாளி மக்கள் கட்சி)

விடுதலைப் புலிகளை எம். ஜி. ஆரும் ஆதரித்துவந்தார், நாங்களும் ஆதரிக்கின்றோம். தனிஈழம் கிடைக்கவேண்டும். அந்த இயக்கத்தை தடை செய்யக்கூடாது.

திருநாவுக்கரசு (எம். ஜி. ஆர். அ. தி. மு. க)

இலங்கைத் தமிழ் அகதிகளை பூனையிடம் எலியை ஒப்படைப்பதுபோல் கப்பலில் ஏற்றி இலங்கைக்கு அனுப்பியுள்ளனர். இதை யார் கேட்பது?
கப்பல் கப்டன் பாதுகாப்புத் தருவதாகக் கூறும்போது
"இலங்கை அரசு எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்காது; விடுதலைப் புலிகள் பாதுகாப்புக் கொடுப்பார்கள்" என்று கூறுகின்றார்கள்.
முதலையிடம் மாட்டிய யானை ஆதிமூலமே என்று அழைத்ததாம். திரௌபதியை துச்சாதனன் துகிலுரிந்தபோது பரந்தாமனை அழைத்தாளாம். அதேபோல தமிழர்கள் பாதிக்கப்படுகின்றபோது விடுதலைப் புலிகளின் தலைவன் பிரபாகரனை நினைக்கின்றார்கள்.

பண்டுருட்டி ராமச்சந்திரன் (பாட்டாளி மக்கள் கட்சி)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வாசகர் கடிதப் பகுதி



# அக்கரைப்பூக்கள்

மதிப்பிற்குரிய "எரிமலை" ஆசிரியர் குழுவின ருக்கு வணக்கம்.

உங்களுடைய ஏட்டை பல தடவைகள் படித்துள் ளேன். இந்த ஏட்டினுடைய முன் அட்டையில் கலை கலாச்சார அரசியல், சமூக ஏடு என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் கலாச்சாரம் என்ற சொல் தூயதமிழ்ச் சொல் அல்ல. மேலும், மாதத்தை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் எழு தும்போது இரண்டு மொழிப் பிழைகள் ஏற்படு கின்றன. உதாரணமாக, AUGUST ஐ ஆகஸ்ட் என்று எழுதுவது.

எதிர்வரும் உங்களுடைய ஏடுகளில் இவ்வாறான மாற்றங்களை அன்புடனும், ஆதரவுடனும் எதிர் பார்க்கின்றேன்.

இப்படிக்கு
உங்கள் உண்மையுள்ள
யோ. யோகானந்தன்.
LONDON.

மேன்மையுள்ள எரிமலை ஆசிரியர் அவர்க ளுக்கு,

நான் அகதியாக ஜெனீவாவில் இருக்கின்றேன். எல்லா புத்தகப் பிரியர்களைப்போல், நானும் ஒரு புத்தகப்பிரியன். உங்களுடைய எரிமலை யின் மூன்று, நான்கு பிரதிகளை தொடர்ந்து வாசித்திருந்தேன். தற்பொழுது கிடைக்க வில்லை. "எரிமலை" வெளிவருவது நின்றுவிட் டதா? தயவுசெய்து விபரத்தை தெரியப்படுத்துவீர் களா?

இப்படிக்கு
பா. ஜெயம்.
SWISS.

கனம் பத்திரிகை ஆசிரியர் அவர்கட்கு,
"எரிமலை" மாத சஞ்சிகை,
தை மாதச் சஞ்சிகையொன்று கைக்கு எட்டியது. சகலதும் சிறப்பான முறையில் அமைந்திருந்தது.

இங்கனம்
சி. சற்குருநாதன்.
GERMANY.

அன்புடன் ஆசிரியர் குழுவிற்கு,

தை, மாசி மாத "எரிமலை" இதழ்கள் படித் தேன். மிகவும் சிறப்பாக இருந்தன. தரம் உயர்ந் திருக்கின்றது. ஆனாலும் சில குறைகளையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மாசி இதழில் ஆங்கிலக் கவிதை ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந் தது; அதனை தமிழிலும் பிரசுரிக்காதது குறை யாகவே, கருதுகின்றேன். பலருக்கு அதனை விளங்கிக்கொள்ள முடியவில்லை. இப்படியான குறைகளை தவிர்ப்பது நன்று.

எரிமலை விரும்பி,
உதயன்
PARIS.

அன்பின் எரிமலை ஆசிரியருக்கு,
ஐயா,

இங்கு வரும், நம் நாட்டின் தற்போதய நிகழ்வு களையும், விடுதலைப் போராட்ட உண்மை நிகழ்வுகளையும் தாங்கிவரும் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் தொடர்ந்து படிப்பவர்களில் நானும் ஒருவன். தற்போது, தங்களின் "எரி மலை" இதழை தொடர்ந்து வாசித்து வருகின் றேன். செய்திகளைச் சேர்ப்பது நல்லது.

இப்படிக்கு
ந. ஜீவா
GERMANY.

மதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

உங்களால் மாதம் ஒருமுறை வெளியிடப்படும் "எரிமலை"யின் மாசி-15 இதழைப் பார்த்தேன். மிக நன்றாக இருந்தது. குறிப்பாக, வானதியின் கவிதை, முப்பது வருடங்களாக ஓடிக்கொண்டி ருக்கின்றேன், இன்று உலகப் பெண்களில், போராட்டப் பங்களிப்பில் முதன்மை இடத்தைப் பிடித்திருக்கும் எம் சகோதரிகளின் போராட்ட வளர்ச்சியை சித்தரிக்கும் ஈழவிடுதலையும் பெண்களும் என்ற கட்டுரையைப் படித்தேன். மிகவும் நன்று. அட்டைப்படம் என்னைச் சிந்திக் கவைத்துவிட்டது.

அன்புடன்
தணிகவேல்.
PARIS.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# இந்திய - அமெரிக்க உறவு சாத்தியமா?

மதி

கூட்டுச்சேராக் கொள்கையின் பிதாமகரான இந்தியா, அக்கொள்கையை மிக எளிதாகக் கழற்றி எறிந்துவிட்டு சரசம் ஆட முற்பட்டுள்ளது. அரசியலில் அதுவும் சர்வதேச அரசியலில் நிரந்தரக் கொள்கையோ, நிரந்தர நண்பனோ இல்லை என்பதும், தனது நாட்டின் தேசிய நலனே முக்கியம் என்பதும் இங்கு தெளிவாகின்றது. பனிப்போர் (Cold war) முடிவுற்றதும், உலகில் இரண்டு முகாம்கள் இல்லாதொழிந்து அமெரிக்கா தனிப் பெரும் வல்லரசாகத் தலையெடுத்ததும், சோவியத் யூனியன் சீரழிந்து போனதும் இந்தியா தலைகுத்துக்கரணம் போட ஆரம்பித்துவிட்டது. வேறொன்றுமில்லை; நிலைமைக்கு ஏற்ப தனது வெளிவிவகாரக் கொள்கையில் இந்தியா மாற்றங்களைச் செய்து வருகின்றது. அவ்வடிப்படையில் அமெரிக்காவுடன் இந்தியா பொருளாதார ரீதியில் நெருங்கி வருவது மாத்திரமல்ல, இராணுவ ரீதியில் நீண்டகாலத் திட்ட அடிப்படையிலும் (STRATEGIC) இணைந்து செயல்பட இணங்கியுள்ளது. அதனைத் திருப்திப் படுத்தும் வகையில் அமெரிக்காவுடன் நெருங்குவதற்காக அண்மைக் காலங்களில் இந்தியா, தனது நடுநிலைக் கொள்கையில் இருந்து வழுவி பல விட்டுக் கொடுப்புக்களைச் செய்துள்ளது. வளைகுடா யுத்தத்தின் போது, அமெரிக்க யுத்த விமானங்களுக்கு எரிபொருள் நிரப்ப இந்திய அரசாங்கம் தனது விமானத் தளங்களை அனுமதித்ததில் இருந்து இந்த நெருக்கம் ஆரம்பித்தது. ஐ. நா சபையில், அமெரிக்கா ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது.



இந்து சமுத்திரத்தில் அமெரிக்கக் கடற்படையின் ஆதிக்கம் ஏற்படுமா?

இஸ்ரேலியரின் சியோனிசக் கொள்கை ஒரு இனவாதக் கொள்கை என்ற ஐ. நா சபையின் தீர்மானத்தை இல்லாதொழிப்பதாக புதிய தீர்மானம் இருந்தது. இந்தியா இப்புதிய தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்து, பலஸ்தீன மக்களையும், மத்திய கிழக்கு நாடுகளையும் மலைக்கவைத்தது. இஸ்ரேலுடன் பூரண ராஜிய அந்தஸ்தை ஏற்படுத்திக் கொண்டது. அதுமாத்திரமல்ல, தனது பிராந்தியத்தில் "பயங்கரவாதத்தை" முறியடிக்க இஸ்ரேலின் உதவியை இந்தியா நாடப்போவதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரிவித்ததாக பத்திரிகைச் செய்தி ஒன்று கூறியது. மேலும், ஐ. நா சபையின் பாதுகாப்புச் சபையில், விமானக் குண்டுவெடிப்புக்கள் தொடர்பாக லிபியாவுக்கு எதிரான தீர்மானத்திற்கும் இந்தியா அமெரிக்காவிற்கு ஆதரவாக வாக்களித்தது. இதுமாத்திரமல்ல, பொருளாதார ரீதியில் இந்தியா மேற்குலகிற்கு சாதகமாக பல கொள்கை விட்டுக் கொடுப்புக்களை புரிந்து வருகின்றது. வெளிநாட்டு மூலதனத்திற்கு விதிக்கப்பட்டிருந்த பல தடைகளை அகற்றியது.

பொருளாதாரக் கூட்டு முயற்சியில், வெளிநாட்டு மூலதனம் கூடுதலான பங்கைப் (51%) பெறும் வகையில் தனது பொருளாதார கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது. அமெரிக்காவின் செல்வாக்கின் கீழ் இயங்கும், ஆசியான் என்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்கிழக்காசிய நாடுகளின் அரசியல், இராணுவ, பொருளாதாரக் கூட்டமைப்பிலும் இந்தியா மட்டுப்பட்ட அங்கத்தினனாக தன்னை இணைத்துக் கொண்டது.



சரத் பவார்

அவுஸ்திரேலியாவுடன் கூட்டுக் கடற்படைப் பயிற்சிகளில் ஈடுபட்டது. மேலும் பிரிட்டனுடன் "சர்வதேச பயங்கரவாதிகளை" நாடுகடத்துவது சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொண்டது. அதாவது தனது நாட்டில் பிரிவினை கோருவோர் பிரித்தானியாவில் நிதி சேகரித்துச் செயற்படுவதைத் தடுக்கும் நோக்குடன் இவ்வொப்பந்தம் செய்யப்பட்டது. அமெரிக்காவுடனான இராணுவச் செயற்பாடு இதில் முக்கியமானது. இரண்டு அமெரிக்க ஆயுதப்படைத் தளபதிகள் இந்தியாவிற்கு அண்மையில் விஜயம் செய்தனர். கடற்படைத் தளபதிகளில் ஒருவரான அட்மிரல் பிராங் கெல்ஸோ என்பவரும், பசுபிக் பிராந்திய இராணுவத் தளபதியுமான லெப்டினட் ஜெனரல் ஜொனி கோன்ஸ் என்பவரும் இந்தியா வந்து இந்தியப் படைத் தளபதிகளுடன் கலந்துரையாடினர். இவர்களது கலந்துரையாடலின் விளைவாக, "இராணுவ முன்னெடுப்புக் குழு" என்ற கூட்டுக் கொமிற்றி உருவாக்கப்பட்டது. "நீண்டகால இராணுவ உறவுகளை ஏற்படுத்துவதே இதன் நோக்கம்" எனக் கூறப்பட்டது. ஆயுதப் படைகளையும், இராணுவ நடவடிக்கைகளையும் இரு நாடுகளுக்கும் பயனாக பரஸ்பரம் பிணைத்துக் கொள்வதே இந்திய, அமெரிக்க இராணுவக் கூட்டின் அடித்தளக் கொள்கையாக உருவெடுத்துள்ளது.

இவ்வாறாக நெருங்குவதற்கு இரு நாடுகளுக்கும் தமது நலன்கள் பற்றிய தேவைகள் இருக்கின்றன. அமெரிக்காவைப் பொறுத்த வரையில், புதிய உலக ஒழுங்கில் இந்தியா நல்லதொரு கூட்டணியாக அமையலாம் என எதிர்பார்க்கிறது. உலகின் பெரிய "ஜனநாயக" நாடாக இந்தியா உள்ளது. அது மாத்திரமல்ல, பெரும் சந்தையை இந்தியா கொண்டுள்ளதும், வெளிநாட்டு மூலதனத்திற்கு இந்தியா தனது பொருளாதாரத்தை திறந்துவிட்டுள்ளதும் அமெரிக்கா தனது பொருளாதார விஸ்தரிப்பிற்கு வாய்ப்பாக இருக்கும் என எண்ணுகிறது. மேலும், இஸ்லாமிய அடிப்படை வாதமும், அணு ஆயுதங்களைக் கொண்ட இஸ்லாமிய நாடுகளும் வளர்ந்து வருவது-பொதுவான மிரட்டலாக இருநாடுகளும் கருதுகின்றன.

இந்தியாவைப் பொறுத்த வரையில், இந்தியா தனது பிராந்திய வல்லரசுக் கனவை நிறைவேற்ற முயற்சிக்கின்றது. முன்னர் 70 வீதமான ஆயுதங்களை சோவியத் யூனியனிடம் இருந்து உதவியாகவும், மலிவாகவும் பெற்று வந்தது. அந்நிலை இப்போது இல்லை. எனவே இராணுவத் தளபாடங்களுக்கும், உதவிகளுக்கும், தொழில் நுட்பத்திற்கும் அமெரிக்காவைத் தங்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் உலக வங்கி, சர்வதேச நிதியம் போன்ற அமெரிக்க செல்வாக்கில் உள்ள நிதி அமைப்புகளிடமிருந்து நிதி உதவி பெறவேண்டிய பொருளாதார நெருக்கடி நிலையும் இந்தியாவிற்குத் தோன்றியுள்ளது. மேலும், சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றின் மிரட்டல்களிலிருந்து தன்னைப் பாதுகாக்கவும் ஒரு கூட்டணி இந்தியாவிற்குத் தேவைப்படுகிறது. புதிய சூழ்நிலையில், சர்வ வல்லமை மிக்க தனிப்பெரும் சர்வதேசச் சண்டியனாக தன்னை அமெரிக்கா நிருபித்து வரும் நிலையில்-அதன் காலடியில் இந்தியா விழுவது சகஜந்தான்.

ஆயினும் சில முரண்பாடுகள் அங்கு இருக்கவே செய்கின்றது. அமெரிக்கா கட்டுப்பாடற்ற பொருளாதாரத்தை (சுரண்டலை) மேற்கொள்ள விரும்புகின்றது. மேலும் இந்தியா அணு ஆயுத வல்லரசாக வராமல் தடுப்பதற்காக, பிராந்திய ரீதியில் அணு ஆயுத பரவல் ஒப்பந்தத்தில் இந்தியாவைக் கையெழுத்திட வைத்து இந்தியாவின் அணு ஆயுத உற்பத்தியைத் தடை செய்ய எண்ணுகிறது. இந்தியாவோ அணு ஆயுதப் பரவல் தடையானது சர்வதேச ரீதியில் அனைத்து நாடுகளுக்கும் பொதுவாக இருக்கவேண்டும் எனக் கூறுகின்றது.

**அமெரிக்காவுடன் நெருங்குவதற்காக அண்மைக் காலங்களில், தனது நடுநிலைக் கொள்கையில் இருந்து வழுவி பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்துள்ளது. வளைகுடா யுத்தத்தின் போது, அமெரிக்க யுத்த விமானங்களுக்கு எரிபொருள் நிரப்ப இந்திய அரசாங்கம் தனது விமானத் தளங்களை அனுமதித்ததில் இருந்து இந்த நெருக்கம் ஆரம்பித்தது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிராந்திய வல்லரசாகவும், ஐ. நா சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்தவனாகவும் வரமுயற்சிக்கும் இந்தியா, அணு ஆயுதப் போட்டியில் தான் பின்தங்குவதை விரும்பவில்லை. மேலும் உலக பொருளாதாரத்தில் சமநிலை ஏற்படவும், தங்குதடையின்றி சுரண்டல், வளர்ச்சி பெற்ற நாடுகளால் வளர்ச்சி குன்றிய நாடுகளில் மேற்கொள்ளப்படுவதைத் தடுக்கவும் இந்தியா விரும்புகின்றது. இதனால், தனது நாடு உட்பட வளர்ச்சி பெறாத 3 ம் உலக நாடுகள் பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெறவும், பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெற்ற நாடுகளோடு சமமாக உயரவும் முடியும் என கருதுகின்றது.

**பிராந்திய வல்லரசாகவும், ஐ. நா சபையின் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்தவனாகவும் வர முயற்சிக்கும் இந்தியா, அணு ஆயுதப் போட்டியில் தான் பின் வாங்குவதை விரும்பவில்லை.**

இச்சந்தர்ப்பத்தில், இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜே. என் டிக்சித்தின் அமெரிக்க விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது. அமெரிக்க இந்திய கூட்டுச் செயற்பாடு எமது பிராந்தியத்தில் நிச்சயம் பெரும் மாற்றங்களை விளைவிக்கும். தமிழீழப் போராட்டத்திற்கும், விடுதலைக்கும் இது சாதகமாக அல்லது பாதகமாக அமையுமா என்பதை மிக நுணுக்கமாக அவதானிக்கவேண்டும். ■


டிக்சேனி

நெருக்கமாக வருவதாகக் கருதப்பட்ட இந்திய-அமெரிக்க உறவுகளுக்கு ஆப்பு வைப்பதான அறிக்கை ஒன்றை அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களமான "பென்ரன்" தயாரித்துள்ளதாக, அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான "நியூயோக் ரைம்ஸ்" செய்தி வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கை பாதுகாப்புச் செயலாளர் டிக் சேனியால், புஷ் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட இருந்ததாகவும் இதுவே தென்னாசியா தொடர்பான அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையை வடிவமைப்பதற்கு அடி ஆதாரமாக அமைந்திருக்கும் என்றும் சொல்லப்படுகின்றது. தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்கக் கனவுகளை முறியடிக்க, அமெரிக்கா பாகிஸ்தானை சமபல அரசாக வளர்த்து விட வேண்டும் என்றும், அதன் பொருட்டு பாகிஸ்தானுடன் இராணுவக்கூட்டுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவ்வறிக்கை அமைந்துள்ளதாக தெரிகிறது. இந்தியா, பாகிஸ்தான், வடகொரியா, இராக் போன்ற நாடுகள், "மனித குல அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதைத் தடுக்கும் பொருட்டு அமெரிக்கா, இராணுவ நடவடிக்கை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக" அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பனிப்போர் முடிந்த பின்னரான, அமெரிக்காவின் தென்னாசியா தொடர்பான கொள்கை வகுப்புப் பற்றிய இவ்வறிக்கை பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன் பிரகாரம், அமெரிக்கா, ஒக்டோபர் மாதம் 1990 ம் ஆண்டிலிருந்து இடைநிறுத்தி வைத்திருந்த பாகிஸ்தானுக்கான ஆயுத தளபாட விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்கலாம். உலகின் ஒரேயொரு பெருவல்லரசு என்ற தனது அந்தஸ்திற்குப் போட்டியாக, மேற்கு ஐரோப்பா, ஆசியா, முன்னாள் சோவியத் ரஷ்யப் பகுதிகள் ஆகியவற்றில் வேறொரு பெரு வல்லரசு தோன்றுவதைத் தடுக்கும் நோக்கமும் இதில் அடங்கியுள்ளதாக அவதானிகளால் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடயம் குறித்து இந்தியப் பத்திரிகைகள், எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. " நியூயோர்க் ரைம்ஸ்" பத்திரிகையில் வந்த இச்செய்தி குறித்த உண்மையினை அறிந்துகொள்வதற்காக, அமெரிக்காவிலுள்ள தனது அதிகாரிகள் மூலம் மேலதிக விபரங்களைத் திரட்டுவதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். தென்னாசியப் பிராந்தியத்தில் மேலாதிக்கம் செலுத்தும் நோக்கம் இந்தியாவிற்கு எப்போதும் இருந்ததில்லை என்றும் இனியும் இருக்கப் போவதில்லை என்றும் இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் பெரிதாக ஒப்பாரி வைத்துள்ளார். அமெரிக்காவின் அழுத்தத்திற்கு பணிந்துவிடாது, அமெரிக்கச் சவாலிற்குப் பதிலடி கொடுத்து, மூன்றாவது உலகின் தலைவனுக்குரிய தகுதியுடன் இந்தியா நடக்கவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் இந்திய அரசை நிர்ப்பந்தித்து உள்ளன.

அமெரிக்க உதவி வெளிவிவகாரச் செயலாளர், லோரன்ஸ் ஈகிள் பேகர் இந்தியாவைப் பற்றிய கடும் வசனங்கள், அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கையைப் பிரதிபலிக்கவில்லை என்று ஆறுதல் கூறியுள்ளார். தென்னாசியப் பிராந்தியத்தில் அணு ஆயுதப் பரவலைத் தடுக்கும் ஒப்பந்தத்தில் தான் கையெழுத்திடப் போவதில்லை என்று இந்தியா உறுதியாக அறிவித்துள்ளது. அதேவேளை இவ்விடயம் தொடர்பாக அமெரிக்கா கூட்டவிருந்த 5 நாடுகளின் மகாநாட்டிலும் இந்தியா பங்கு பற்றப் போவதில்லை என அமெரிக்கா சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் J. N. டிக்ஷித் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுடன் பரஸ்பர உறவுகளை வளர்த்துக் கொள்ளவே விரும்புவதாக இந்தியா அறிவித்துள்ளது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தமிழ் மக்களின் ஆதரவு என்றும் விடுதலைப் புலிகளுக்கே

- இது ஒரு நடுநிலையான கணிப்பு -

***யாழ்ப்பாணப் போரில் பரா கோமாண்டோக்களுக்கு தலைமைதாங்கிய இந்திய அமைதிப்படை அதிகாரி ARJUN KATOCH அவர்கள் ECONOMIC & POLITICAL WEEKLY என்ற ஆங்கில ஏட்டில் வடித்த கட்டுரையில் இருந்து.***

1990ம் ஆண்டுக் காலகட்டத்தில் தளபதி லெப். ஜென. கல்கட் நாலாயிரம் இந்திய இராணுவத்தினரை இழந்தும் பெரிய சாதனை புரிந்துவிட்டதாகவும், விடுதலைப் புலிகளை பலமிழக்கச் செய்து வவுனியாக் காடுகளுக்கு துரத்திவிட்டதாகவும், சிறீலங்கா இராணுவம் அவர்களை முற்றாக அழித்துவிடும் எனவும் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால் சிறீலங்கா இராணுவம் யாழ்ப்பாணக் கோட்டையை இழந்தது; மாங்குளம் முகாமை இழந்தது. இந்திய இராணுவம் மூன்றுவருட காலத்தில் இழந்த தொகையைவிட கூடுதலான இராணுவத்தினரை ஆறு அல்லது ஏழு மாதங்களில் இழந்தனர்.

முன்பு இந்திய பாதுகாப்பு அமைச்சில் இருந்து பெற்றுவந்த அறிக்கைகளைப் பிரசுரித்த இந்தியப் பத்திரிகைகள் யாவும் இப்பொழுது சிறீலங்கா அரசு வழங்கும் அறிக்கைகளை ஆதாரமாகவைத்து செய்தி வெளியிடுகின்றன.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றும் பலர் கூறிகின்றனர். இவைகள் எல்லாம் விடுதலைப் புலிகளுடன் நேரில் தொடர்பு கொள்ளாதவர்கள் பிறர் கூறியதைக் கேட்டுவிட்டு கூறியவை என்பதை பலர் அறிந்திருக்கமாட்டார்கள். விடுதலைப் புலிகளுடன் நேருக்குநேர் நின்று போராடிய இந்திய இராணுவ அதிகாரிகளுக்கும், சிப்பாய்களுக்கும் மாத்திரமே விடுதலைப் புலிகள் பாதகமாக விளங்கக்கூடிய சூழ்நிலைகளிலும் எப்படி நின்றுபிடித்தார்களெனவும், எப்படி தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றார்களெனவும் உணரமுடியும்.

உண்மையை நிலையை அறியாது, SOUTH BLOCK என அழைக்கப்படும் வெளிவிவகார அமைச்சின் பிரிவு எதைக் கேட்க விரும்புகின்றதோ, அதைக்கூறிக்கொண்டிருந்த இராணுவ உயர் அதிகாரிகள் கூட்டிச் சென்ற இடங்களை மாத்திரம் பார்த்துவிட்டு, அவர்கள் கூறியதை மட்டும் கேட்டுவிட்டு பத்திரிகைகளுக்கு எழுதிய நிருபர்களின் அறிக்கைகளை வாசித்துவிட்டு, விடுதலைப் புலிகளுக்குள்ள ஆதரவை இந்திய மக்கள் எடைபோட்டனர்.

விடுதலைப் புலிகள் எல்லோரும் கூறுவதைப்போல் இராட்சதர்களாக இருந்தால் அவர்கள் எப்படி இவ்வளவு காலமாக நீடித்திருக்கமுடியும்? ஆற்று வெள்ளம்போல் தமிழ் இளைஞர்கள் இயக்கத்தில் சேருவதையும், கொள்கைக்கும் குறிக்கோளுக்கும் உயிரை அர்ப்பணம் செய்வதையும் பயத்தால் ஒருபோதும் சாதிக்கமுடியாது.

1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10ம் திகதி விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி இந்திய அமைதி காக்கும் படைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் அவர்கள் வெற்றிபெற முடியாத நிலையை அந்த நேரமே அடைந்தனர். தமிழ் மக்களின் நிருபிக்கப்பட்ட பாதுகாவலர்கள் என்ற நிலையில் விடுதலைப் புலிகள் இருந்த நேரத்தில், கொடுக்கப்பட்ட இந்த உத்தரவு பொதுமக்களின் நிலைப்பாட்டிற்கு மாறுபட்டதாகவே அமைந்தது. பொதுமக்கள் முழுமனதோடு ஆதரவளிக்கும் விடுதலைப் புலிகள் போன்ற கட்டுக்கோப்பான இயக்கங்கள் எதனையும் எந்த இராணுவமும் வெற்றிகொள்ளமுடியாது. இதே பாடத்தை சிறீலங்கா இராணுவமும் ஆனையிறவிலும், முல்லைத்தீவிலும் பாரிய இழப்பிற்குப்பின் படித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் போராளிகள் மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள்; அதனால் தலைவர்கள் கட்டளையிட்டவுடன் உயிரைவிடத் தயாராக இருக்கின்றார்கள் எனக்கூறுவது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. சிறீலங்காவில் கல்விபயின்றோர் அதிகமாக இருக்குமிடம் யாழ்ப்பாணம். நூற்றுக்கு நூறுபேர் கல்வி பயின்றோர். விடுதலைப் புலிகளின் ஆட்சேர்ப்பு நிலையமாக விளங்கும் யாழ்ப்பாணம் சர்வகலாசாலையின் உறைவிடமாகக் கருதக்கூடியது. விடுதலைப் புலிகள் வெடிகுண்டு விஷயத்தில் நிபுணர்களாக விளங்குவது அவர்கள் யாவரும் கல்வி பயின்றவர்கள் என்பதால். வெடிகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டோர் யாவரும் விஞ்ஞானத் துறையில் பட்டதாரிகள். போராளிகள் யாவருக்கும் வெடிகுண்டு வெடிக்கவைக்கத் தெரியும். இப்படியான தேர்ச்சியுடன், அவர்களுக்குள்ள இயற்கையான புத்திசாலித்தனமும் சேர்ந்து உருவாக்கப்பட்ட கண்ணிவெடிகள் இந்திய இராணுவத்தையே அதிரவைத்தது.


விடுதலைப் புலிகள் தமது கைதிகளை ஒருபோதும் துன்புறுத்தியது கிடையாது. வானொலிமூலம் போர் முனையில் இருந்து அவர்கள் தலைமைப்பீடத்திற்கு கொடுக்கும் ஒவ்வொரு அறிக்கையும்சுருக்கமாகவும் உண்மையாகவும் இருந்தன. இவர்களின் அறிக்கைகளை வானொலி ஒட்டுக்கேட்கும் சாதனங்கள்மூலம் நாமும் கேட்கக்கூடியதாக இருந்தன. இதையொத்த அறிக்கைகள் எமக்கும் சென்னை இராணுவத் தலைமையகத்திலிருந்து கிடைக்காதா என நாங்கள் ஏங்கினோம்.

சிறீலங்கா வடக்கு கிழக்கு மாகாணங்களின் உரிமைப் பிரச்சனை தீர்க்கப்படாமல் இருக்கும்வரை தமிழ் மக்களின் ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்தும் இருந்தவண்ணமே இருக்கும். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இயற்கையும் மனிதனும்

ஆக்கம்
சங்கர்

## உயிர்களின் பரிணாமம்

கடலில் தோன்றிய ஒருகல உயிர்கள் வேறு நிலைகளில் இணைந்து கடல் பாசியும், பக்டீறியாக்களும் தோன்றின. இவை, கடல்நீரில் உள்ள கனிப்பொருட்களை நுகர்ந்து வெவ்வேறு சூழ்நிலைகளின்போது தாவரங்கள் தோன்றின. முதலில் தோன்றிய இப்பாசிவகை "ஸ்ரோமற்றோலிற்" எனப்படுகின்றது. இது இன்றும்




ஸ்ரோமற்றோலிட்

ஆதிக்கண்டம் எனக்கருதப்படும் அவுஸ்திரேலியாவின் கடலில் காணப்படுகின்றது. இவை கடல்நீரில் இருந்து ஒட்சிசனை வெளிவிடுகின்றன. பூமியில் வளிமண்டலத்தில் ஒட்சிசன் தோன்றுவதற்கும் தரையில் உயிர்கள் வாழ்வதற்கும் இந்த ஒட்சிசன் காரணமாயிற்று. பாசியிலிருந்து விடுபட்டுச் சென்று உயிர் உள்ள கலங்கள் அசைந்து இடம் பெயர்ந்து சூழலுக்கேற்ப வேறுநிலை மாற்றம் அடைந்தன. விலங்குநிலையில் தோற்றம் பெற்ற உயிர்கள் முதலில் வெறும் நுண் சதைகளால் ஆன உயிர்களாயிருந்தன. இவை கடல்நீரை உட்கொண்டு, சூரிய வெளிச்சத்தால், அதிலுள்ள கனிமங்களினால் வளர்ச்சி பெற்றன. பூமி தோன்றிய போதிருந்த கடல்நீரின் சேர்க்கையா
னது, இன்றுள்ளது போல் இருந்திருக்கவில்லை. கடல்நீர் ஓர் கூழ்க்கரைசலாக இருந்தது. அதில் இருந்த கனிமங்களின் சேர்க்கை வீதம் இன்றுள்ளது போல் அல்லாது வேறுபட்டிருந்தது. இதனால் பல இலட்ச வருடங்களில் அவை, நிலைமாற்றம் அடைந்து சதையும் சதையைச் சுற்றி ஓடுகளுமான உயிர்கள் தோன்றின. இந்த நிலையிலிருந்து முதுகெலும்புள்ள உயிரினங்கள் தோன்ற பல இலட்சம் வருடங்கள் எடுத்தன. இக்காலகட்டத்தில் ஓடுகளான உயிரினங்கள், ஊரி, சிற்பி போன்றவை மிகவும்பெரிய உருவம் உள்ளனவாகவும் இருந்தன.

## கண்டங்கள் நகர்தல்

ஆரம்பத்திலிருந்து பூமியின் நிலப்பரப்பும் நீர்ப்பரப்பும் மாறுபட்டுக் கொண்டே வந்துள்ளன. இந்தமாற்றம் நிகழ்வதற்கான காரணம் என்ன என்பை தெரிந்து கொள்வது அவசியம்.

உண்மையில் பூமியின் மேற்பரப்பானது அதன் உட்பகுதியில் எரிந்து கொண்டிருக்கும் எரிகுழம்பின்மேல் மிதந்து கொண்டிருக்கின்றது. திரவ நிலையில் உள்ள இந்த எரிகுழம்பின் மேற்பரப்பு அலை வடிவில் அசைந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த அசைவின் வேகம் மிகவும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மெதுவானதாகும். இந்த அசைவின்போது பூமியின் மேற்பரப்பு மேல் எழும்பி பின் கீழ் அமிழ்ந்து போகின்றது. இது நிலப்பிளவைத் தோற்றுவிக்கின்றது. இத்தகைய பிளவின் போது பூமியின் நிலப்பகுதி படைகள் (தட்டுக்கள்) ஒன்றிலிருந்து மற்றது சறுக்குகின்றது. இத்தகைய விளைவை ஆங்கிலத்தில் டெக்டோனிக் (Tectonic) விளைவு என்று கூறிக்கொள்வர். கீழ் அமிழும் பகுதிகடலுள் மூழ்கிப் போவதும், மேல் எழும் பகுதி கடலின் நீர்ப்பரப்பை அழித்து மேலே வருவதும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது. இத்தகைய அதிர்வசைவுகளே நில நடுக்

சில இடங்களில் பூமியின் நிலப்பரம்பையும் மீறிக்கொண்டு எரிமலையாக வெளிவருகின்றன. இவ்வலைகள் பல இடத்தை தாண்டியதும், எரிமலைகள் அணைந்து போகின்றன. இன்று பூமிக்கிரகத்தில் தோன்றும் எரிமலைகளின் 4/5 பங்கு சமுத்திரங்களின் அடியில்த்தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த எரிமலைகள் மேலெழும் போது கீழேயுள்ள கனியவளங்களையும் மேலே கொண்டு வந்து தள்ளுகின்றன. சுமார் 55 கோடி ஆண்டுகட்கு முன் பூமியின் நிலப்பரப்பானது 2 கண்டங்களாகளாயிருந்தது. எஞ்சியது நீர்ப்பரப்பாகவும் அமைந்திருந்தது.



கமாகவும் வெளிப்படுகின்றன. இந்நிலநடுக்கம் பூமியில் பல இடங்களிலும் நிகழ்ந்துள்ளன. ஒரு சில, இடங்களில் நூற்றாண்டு கால இடைவெளிகளிலும் நடக்கின்றன. இலங்கையில் திருகோணமலையை அண்டியும் இது நடந்துள்ளது.

இதனால் பல கோடி வருடங்களுக்கு முன் இருந்த கண்டப்பகுதிகள் கடலில் அமிழ்ந்த போக, கடல் நீரின் கீழ் இருந்த நிலப்பகுதிகள் புதிய கண்டங்களை தோற்றுவித்துமுள்ளன.

இந்த எரிகுழம்பு அலைகள் அசையும் போது

ஆரம்பத்தில் இருந்த நிலப்பரப்பானது "கொண்டுவானா" என்றும் லோறிஸ்யா என்றும் அழைக்கப்பட்டது.

கொண்டுவானா என்ற நிலப்பரப்பின் தேன்பகுதி பிரிந்து தென் அமெரிக்கா, ஆபிரிக்கா அவுஸ்திரேலியா, அன்ராட்டிக்கா, இந்திய உபகண்டம், அரபுக் கண்டம் என்பன பிரிந்து சென்றன. இதேபோன்று மேல் பகுதி பிரிந்து வட அமெரிக்கா, கிறீன்லாந்து ஐரோப்பிய கண்டங்கள் தோன்றின. ■

## குறள் அம்பு

அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்.

**கருத்துரை:**

*கலங்காத உள்ளத்தை உடையவனுக்கு மென்மேலும் துன்பம் வந்தாலும் அத் துன்பம் துன்பப்பட்டுப்போகும்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்